# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, டிசம்பர் 07, 2018. இதழ் - 42









**சுற்றுலாத்துறையில் உள்ளூர் நிபுணர்கள் தேவை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களின்

பக்கம் - 09



**மகாகவி பாரதிக்கு 136 வயது**


தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் 1882

பக்கம் - 04



**பிறமொழி தெரியாவிடின் ஏனைய மொழிக்காரர் மத்தியில் மறுமொழி கூற வழியின்றி ஊமையாய் இருக்க நேரிடும்**

பக்கம் - 06




**'மகாவம்சம்' எழுதப்பட்ட வரலாறு!**

"மகாவம்சம்" மூல நூல் இலங்கையின் பண்டைய

பக்கம் - 05



# மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் சோதனைகள்

## அச்ச உணர்வில் மக்கள்

மட்டக்களப்பு வவுணதீவு சோதனைச் சாவடி மீதான தாக்குதலையடுத்து மட்டக்களப்பின் பல இடங்களிலும் பாதுகாப்புச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக வியாழனன்று பகல் மட்டக்களப்பின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதலின் போது, குறிப்பாக முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களது, புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளது குடும்பத்தினரது வீடுகளிலும் காணிகளிலும் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.


இந்தத் தேடுதல் காரணமாக இப்பிரதேச மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு வவுணதீவு சோதனைச் சாவடி மீதான அடையாளம் தெரியாத நபர்களின் தாக்குதலின் போது 2 பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் குறித்து பொதுமக்கள் மத்தியில் கணிசமான கவலை அதிகரித்துள்ளது. பலர் இவை குறித்த அச்சத்தில் இருக்கிறார்கள். பலியான பொலிஸ்காரர்கள் குறித்தும் பொதுமக்களால் கவலை வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# மோசமான காலநிலை இடர்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கைக்கு இரண்டாம் இடம்

## 2017 ஆம் ஆண்டு நிலவரம்



படுமோசமான காலநிலை இடர்களால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடந்தை பிடித்துள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான நிலவரத்தைக் காண்பிக்கும் ஒரு புதிய பூகோள மட்ட சுட்டெண்ணின் அடிப்படையிலேயே இந்தக் கணிப்பு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகால காலநிலை ஆபத்து குறித்த இந்தச் சுட்டெண்ணில் முதலாவது இடத்தைப் பெறும் போர்ட்டோரிக்கோவுக்கு அடுத்த இடத்தில் இலங்கை இருக்கின்றது.

2019ஆம் ஆண்டுக்கான பூகோள காலநிலை ஆபத்துச் சுட்டெண்ணின் ஒரு பகுதியான இந்தத் தரவுகள், போலந்தின் கட்டோவைஸ்

தொடர்ச்சி... (பக்கம் -02 )


# 'முன்னாள் விடுதலைப்புலிகள் மீது முத்திரை குத்த வேண்டாம்'



முன்னாள் விடுதலைப்புலிகள் மீது முத்திரை குத்துவதை வன்மையாக கண்டிப்பதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா மட்டக்களப்பில் தெரிவித்தார்.

வவுணதீவில் படுகொலை செய்யப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று மட்டக்களப்பு கல்லடியில் வீடு ஒன்றில் கடந்த திங்கட்கிழமை(3.12.2018) மாலை நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், 'ஆயுத ரீதியான போராட்டத்தினை நாங்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76


தொடர்ச்சி... (பக்கம் -15 )

## அரங்கத்தில் அதிதிகள் அரங்கத்தில் ..



கடந்தவாரம் காரைதீவில் இடம்பெற்ற விபுலாநந்த மொன்டிசோரி முன்பள்ளிப்பாடசாலையின் வருடாந்த விபுலவிழுதுகளின் விடுகை விழாவிற்கு வருகை தந்த அதிதிகள் அரங்கத்திலிருந்தவாறே அரங்க நிகழ்ச்சிகளை விட, மட்டுநகரிலிருந்து வெளியாகும் அரங்கம் வாராந்த பத்திரிகைளில் கவனம் செலுத்தியதைக் காணமுடிந்தது. இங்கு அதிதிகள் அரங்கத்தில் மூழ்கியிருப்பதைக் காணலாம், (காரைதீவு சகா)

## சிவானந்தா பழைய மாணவர் சங்கவைரவிழா!



முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் தோற்றுவித்த மட்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் சோதனைகள்

மட்டக்களப்பு வவுணதீவு சோதனைச் சாவடி மீதான தாக்குதலையடுத்து மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து வவுணதீவு, கன்னங்குடா, மயிலவெட்டுவான், வாகரை கட்டுமுறிவு எனப் பல பிரதேசங்களிலும் பரவலாக சுற்றிவளைப்பு தேடுதல்கள் இடம்பெற்றுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் காஞ்சிரம்குடா, திருக்கோவில் பிரதேசங்களிலும இவ்வாறான தேடுதல்கள் நடத்தப்பட்டதாகவும் அறிய முடிகிறது. விசேட புலனாய்வுப்பிரிவினர், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எனப் பல பிரிவினரும் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் தேடுதல், விசாரணை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன், இரவு மற்றும் பகல் வேளைகளிலும் திடீர் திடீர் சோதனைகள் நடத்தப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது.

## விபுலாநந்தாவில் விடுகைவிழா



காரைதீவு விபுலாநந்த மொன்டிசோரி முன்பள்ளிப் பாடசாலை விடுகைவிழா மொன்டிசோரிப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் காரைதீவு இ.கி.மி.பெண்கள் பாடசாலையின் சாரதா கலாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதம அதிதியாக காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறார்களின் கண்கவர் பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள் அவையோரின் கரகோசத்தைப் பெற்றன. அங்குபயின்று தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 7 மாணவர்கள் பதக்கம்அணிவிக்கப்பட்டு, பரிசுகள் வழங்கி நினைவுச்சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

## ஆரையம்பதி மாணவி சாதனை



கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் அனுசரணையுடன் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடாத்திய கர்நாடக சங்கீத போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஆரையம்பதி செல்வாநகரைச் சேர்ந்தவரும் ஆரையம்பதி இராம கிருஷண மிசன் மகாவித்தியாலய மாணவியுமான டனிஷா லோகநாதன் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் முதலாம் இடத்தைப்பெற்று வெற்றிவாகை சூடியதுடன் 30.11.2018 அன்று நடந்த தேசிய ரீதியிலான நடைபெற்ற போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளார்.

படங்களும் தகவல்களும் - சுகேன், ஆரையம்பதி

## சத்துருக்கொண்டான், ஓசானம் நிலைய ஒளி விழா



--- ஜே.எச்.இரத்தினராஜா

மட்டக்களப்பில் அமைந்துள்ள சத்துருக்கொண்டான், விசேட தேவைகளிலுள்ள சிறப்புக் குழந்தைகளின் ஒளிவிழாவானது ஓசானம் நிலையத்தில் 02.12.2018 அன்று மாலை சிறப்பாக இடம்பெற்றது. ரோஜா மிஸ்ரிக்கா துறவறசபை அருட்சகோதரியும், நிலைய நிர்வாகியுமான அருட்சகோதரி நிலானி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புக் குழந்தைகள் தமது திறமைகளை பல நிகழ்வுகள் மூலம் வெளிக்கொணர்ந்து அனைவரையும் மகிழ்வித்தனர். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை. ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். ஆயர் தமதுரையில் 'இயேசு ஏழைகள், பாவிகள், அநாதைகள், கைவிடப்பட்டவர்களையே தேடிச் சென்றார். இவ்வாறானவர்களை அன்பு செய்யவே இயேசு மனிதனாகப் பிறந்தார். நாமும் இவ்வாறாவனவர்களைத் தேடிச்செல்ல வேண்டும். இன்று அன்புக்காக ஏங்கும் இவ்வாறான சிறுவர்களையும் நாம் தேடிச்செல்லவேண்டும். அதற்குரிய இடங்களில் இதுவும் ஓர் இடம்தான் இவர்களைத் தேடிச்செல்லும்போது அவர்கள் மகிழ்கின்றனர், அதேவேளை நாமும் மகிழ்கின்றோம்' எனக் குறிப்பிட்டார். சிறப்பாகப் பணியாற்றும் அருட்சகோதரி, ஆசிரியர்கள் அனைவருக்கும் தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகஸ்தர் திரு.எஸ். அருள்மொழி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், அருட்சகோதர சகோதரிகள், புனித வின்சன்ட் டி போல் சபை அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

-

## மாமாங்கேஸ்வரர் வித்தியாலய மாணவர்கள் அகில இலங்கைப் போட்டியில் முதலிடம்



அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்ட இறுதிப்போட்டி-2018ல் பங்குபற்றிய மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர வித்தியாலய மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட “சூழல் பாதுகாப்பு” எனும் தொனிப்பொருளில் அமைந்த தாளலய ஆற்றுகையானது முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது. அடிப்படையிலேயே பொருளாதார ரீதியாக மிகவும் வசதி குறைந்த குடும்பப் பின்னணியையும் ஏனைய நகர்ப்புற பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் வளம் குறைந்த பாடசாலைப் பின்புலத்தையும் கொண்டமைந்த சூழலில் தமது அசாத்தியத்திறமை, அதிதீவிர பயிற்சி மற்றும் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பினாலும் இச்சாதனையைப் படைத்து பாடசாலைக்கு மாத்திரமல்லாது எமது மண்ணிற்கும் பெருமை சேர்த்த மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியருக்கும் வழிநடத்திய அதிபருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## சத்துருக்கொண்டான் பகுதியில் 3 வீதிகளுக்கான புனரமைப்புப் பணிகள்



மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் த.கௌரி அவர்களின் முயற்சியில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு பனிச்சையடி பிள்ளையார் கோயில் வீதி,பனிச்சையடி காளி கோயில் வீதி,சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலய வீதிகள் ஆகியவற்றுக்கு கடந்த சனிக்கிழமையன்று புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் வேலைத்திட்டமானது மட்டக்களப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஹரிதரன் கிரி வழிகாட்டலில் இடம்பெற்றது. இதில் பனிச்சையடி வாழ் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வீதிக்கான பணிகளுக்கு 10 லட்சம் ரூபாய்கள் செலவிடப்படும்.

# அரசியல் நெருக்கடி தீரவில்லை : நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கும் மக்கள்

இலங்கை நாடாளுமன்ற நெருக்கடி நிலை அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதமராக தொடர்வதற்கு தடை விதித்ததை அடுத்து மேலும் இக்கட்டான நிலையை எட்டியுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தை கலைத்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தற்போது விசாரணையில் உள்ளன. 7 ஆம் திகதி அதன் தீர்ப்பு வெளியாகலாம் என்று முன்னதாக கூறப்பட்ட போதிலும், வழக்குகளின் எண்ணிக்கை, நீதிபதிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக தீர்ப்பு வெளியாவது சில தினங்கள் தாமதமாகலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. ஆகவே அந்தத் தீர்ப்பு வெளியாகும் வரை தற்போதைய நிலைமை தொடரவே செய்யும்.

முதலில் கூறப்பட்ட வழக்கின் காரணமாக பிரதமரும், அமைச்சரவையும் செயற்பட முடியாமல் போக, அது ஜனாதிபதி அமைச்சின் செயலாளர்களின் மூலமாக ஆட்சியை நடத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி பெயரளவிலான ஜனாதிபதி அல்ல. அவர் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதிதான். அவரது பதவி இந்திய ஜனாதிபதியைப் போன்று அலங்கார அல்லது அடையாளப் பதவி அல்ல. ஆகவே அவர் ஆட்சியை செயலாளர்கள் மூலம் நடத்துவதில் தற்போதைக்கு பெரிய சிக்கல்கள் இருக்கப்போவதில்லை.

ஆனால், டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர்தான் பிரச்சினைகள் காத்திருக்கின்றன. அடுத்த வருடம் முதலாம் திகதி முதல் நாட்டை ஆட்சி செலுத்துவதற்கு ஒரு ரூபாவை செலவழிக்க வேண்டுமானாலும் அதற்கு நாடாளுமன்ற வரவு செலவுத்திட்டம்



மூலம் நிதி ஒதுக்கியாக வேண்டும். அல்லது தற்காலிக வரவு செலவுத்திட்டம் ஒன்றாவது நிறைவேற்றப்பட்டாக வேண்டும். ஆனால், ஒரு பிரதமர் இருந்து, அமைச்சரவை இருந்து நாடாளுமன்றம் நடத்தப்பட்டால் மாத்திரமே அதற்குச் சாத்தியம் உண்டு. அப்படி இல்லாது போகுமிடத்து ஜனாதிபதியால் ஒரு ரூபாய் கூட செலவு செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

ஆகவே அதற்கு முன்னதாக சிக்கல்கள் தீர்க்கப்பட்டாக வேண்டும்.

வரப்போகின்ற நீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்றத்தை கலைத்தது சரி என்று கூறினால், தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் உடனடியாக மேற்கொள்ளப்படலாம். ஆனாலும், டிசம்பர் 31 க்கு முன்னதாக புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படாவிட்டாலும், அதனை அமைக்கும் வரை ஜனாதிபதி இலங்கைக்கான ஒருங்குபடுத்தப்பட்ட நிதியில் இருந்து (திறைசேரியில்) ஓரளவு நிதியை தற்காலிகமாகப் பெற்று தேர்தல் நடத்துதல் மற்றும் புதிய நாடாளுமன்றத்தை அமைத்தல், அதுவரை ஆட்சிக்கான செலவினங்களை கையாள்தல் ஆகியவற்றை செய்ய முடியும். அப்படியான நிலைமை வந்தால் சிக்கல் இல்லாது போகும். அல்லது படிப்படியாகக் குறைந்துபோகும்.

ஆனால், நாடாளுமன்றத்தை கலைத்தது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால்தான் பிரச்சினை மேலும் தீவிரமடையும்.

அப்படியான ஒரு தீர்ப்பு வந்தால், ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் என்று அவரது கட்சி கூறும், ஆனால், ஜனாதிபதி அதனை ஏற்க மறுத்து வருகின்றார். அப்படியானால், நாடாளுமன்றத்தின் ஸ்தம்பிதநிலை தொடரும். அப்படியான நிலை தோன்றுமானால் புதிய வரவு செலவுத்திட்டத்தை எப்படிக் கொண்டு வருவது, பணத்தை எப்படி ஒதுக்குவது என்ற பிரச்சினை எல்லாம் தலையெடுக்கும்.

அத்தகைய சூழ்நிலை தற்போதை அரசியல் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கலாம்.

ஆக, இலங்கை மக்கள் ஜனநாயக ரீதியாக, அரசியல் ரீதியாக எதிர்கொள்ளும் நெருக்கடி இன்னமும் தீரவில்லை. அது

**சீவகன் பூபாலரட்ணம்**

தற்போதைக்கு ஓரளவுக்கு நீதித்துறையின் கையிலேயே இருக்கிறது.

எல்லாவற்றையும் பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர மகா குடிஜனங்களுக்கு வேறு வழி கிடையாது. முடிந்தால் ஓய்வு நேரத்தில் கொஞ்சம் ஒழுங்கான அரசியலை படிக்கலாம். அடுத்த தேர்தலிலாவது ஒழுங்கான ஆட்களை தேர்வு செய்ய முயற்சிசெய்யலாம்.

# யானையின் காலடிகளின் அதிர்வு கொண்டு அறிதல்



யானைகள் நடந்து அல்லது ஓடி வரும்போது ஏற்படுத்தும் அதிர்வுகளை கொண்டு அவற்றின் வருகையை முன்னரே அறியும் புதிய வழிமுறையை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

யானைகள் சாதாரணமாக நடப்பதந் மூலமாக மட்டுமின்றி, ஒருவித ஒலியை எழுப்புவதன் மூலமும் அவற்றின் வருகையை முன்னரே அறிந்துகொள்ள முடியுமென்று பெத் மோர்டிமர், டார்ஜெ நிஸ்ஸன்-மெயர் ஆகிய விஞ்ஞானிகள் இணைந்து கண்டறிந்துள்ளனர்.

நிலநடுக்கத்தை அறிவதற்கு பயன்படுத்தப்படும் அமைப்புமுறையை கொண்டே யானைகளின் வருகையையும் கண்டறியலாம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் தங்களது ஆராய்ச்சி முடிவுகள் குறித்து அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் நடைபெற்று வரும் கருத்தரங்கு ஒன்றில் விளக்கினர்.

நிலநடுக்க அலைகள் எனப்படும் சீஸ்மிக் அலைகள் எவ்வாறு தரையின் வழியே ஓரிடத்திற்கு வருவதை, அது சுமார் நான்கு மைல்கள் தூரத்தில் இருக்கும்போதே கண்டறிய முடியுமென்பதை அவர்கள் அப்போது விளக்கினர்.

கென்யாவின் அடர்ந்த காடுகளிலுள்ள யானைகள் நடப்பதன் மூலமும், ஒலியின் மூலமும் வெளிப்படுத்திய அதிர்வுகளை ஜியோபோன் (geophones) என்ற உபகரணத்தை கொண்டு அளவிட்டனர்.

ஓரிடத்தின் நிலையான புவியியல் தகவல்களையும், நிலநடுக்க அலைகளை கண்டறியும் கருவியுடன் இணைக்கப்பட்ட மென்பொருளில் பதிவாகும் கணினி சார்ந்த கணக்கீடுகள் வழியாக யானைகள் வெளிப்படுத்தும் அதிர்வுகள் குறித்த துல்லியமான விவரங்களை கண்டறிய முடியுமென்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

யானைகளின் அதிர்வுகளை பதிவுசெய்யும்போது அவற்றின் செயல்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டு, பின்பு வெகுதூரத்தில் அமைக்கப்பட்டிருந்த கருவியில் பதிவான அலைகளுடன் ஒத்திசைவு செய்து அது யானையின் செயல்பாடுதான் என்பதை உறுதி செய்தனர்.

மேலும், மணலின் தன்மையும், தரைப்பகுதியில் நிலவும் மற்ற ஒலியும் வெகுதூரத்திலிருந்து யானையின் நடமாட்டத்தை அறிவதற்கு தடையாக உள்ளதாகவும், பாறைகளின் வழியே அலைகள் பரவுவதைவிட மணற்பாங்கான இடங்களின் வழியாக அதிர்வுகள் அதிக தூரத்துக்கு பயணிப்பதும் தெரியவந்துள்ளது.

இந்த அமைப்புமுறையின் மூலம் யானைகள் வெகுதொலைவில் இருந்தாலும், அவை என்ன செய்துக்கொண்டிருக்கின்றன, ஏதாவது ஆபத்து நிகழ வாய்ப்புள்ளதா என்பது குறித்து முன்னரே தெரிந்துகொள்ள முடியும்.


இந்த ஆராய்ச்சி முடிவுகள் 'கரண்ட் பயாலஜி' (Current Biology) என்ற சஞ்சிகையில் இந்த வருடத்தின் தொடக்கத்தில் பதிப்பிக்கப்பட்டது.

"யானைகள் இயற்கையாக எழுப்பும் அதிர்வுகளை புரிந்துகொள்ளும் பயணத்தில் இந்த ஆராய்ச்சி முடிவுகள் புதிய சாத்தியங்களை கண்டறிந்துள்ளது" என்று சேவ் தி எலிபெண்ட்ஸ் என்ற யானைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைமை செயலதிகாரியான பிராங்க் போப் இந்த ஆராய்ச்சி குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

"நெரிசலான நிலப்பரப்பில் மனிதனால் உருவாக்கப்படும் இரைச்சல் காரணமாக ஏற்படும் சவால்கள் குறித்தும் இந்த ஆராய்ச்சி பல புதிய கற்பித்தல்களை அளித்துள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

-- நன்றி பிபிசி

# மகாகவி பாரதிக்கு 136 வயது




தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி பிறந்த சுப்பிரமணியன் சுப்பையாவாகி, தனது 11 வயதில் பாரதியாகி, 1921 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி சென்னையில் திருவல்லிக்கேணியில் மறைந்தார்.

அவருக்கு இந்த டிசம்பர் மாதம் 136 வயது!

பாரதியை இன்றும் சிலர் கவிஞராக மாத்திரமே பாரக்கின்றபோதிலும் அவர் ஒரு மகாகவி என்பதை நிரூபிப்பதற்காக பலர் தொடர்ச்சியாக எழுதியும் பேசியும் வந்துள்ளனர்.

யார் கவிஞன் என்று பாரதியே ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு சொல்லியுள்ளார்:

"கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், எவனொருவன்
வாழ்க்கையையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி "

அத்துடன், " நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் " எனவும் சொன்னவர் அவர்.

பாரதி தன்னை கவிஞனாகவே பிரகடனம் செய்துகொண்டிருந்தாலும், அவர் மகாகவியா..? அதற்கான தகுதி அவருக்குண்டா என்னும் வாதங்கள் நீண்ட காலம் தொடர்ந்தன. அத்துடன் அதற்கு எதிர்வினைகளும் பெருகின.

பாரதி மகாகவிதான் என்பதை வலியுறுத்தும் வகையில் இலங்கைப்பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ( 1932-2011) அவர்களும் தமிழகப்பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்களும் இணைந்து நீண்ட நாட்கள் ஆய்வுமேற்கொண்டு எழுதிய நூல்தான் "பாரதி மறைவு முதல் மகா கவி வரை".

பாரதி மறைவு முதல் மகா கவி வரை நூலை தமிழ்நாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்வெளியிட்டுள்ளது. இதுவரையில் இரண்டு பதிப்புகளைக் கண்டுள்ள இந்நூலில் நாம் பாரதி குறித்த தெளிவுகளையும் பெறமுடிகிறது.

யார் சொன்னால் என்ன சொல்லாவிட்டால் என்ன பாரதி ஒரு மகாகவிதான் என்று தொடர்ச்சியாக வாதிட்டவர்கள் தொ.மு. சி. ரகுநாதனும் ஜீவானந்தமும். அவர்களின் கூற்றை உலகம் ஏற்கும் அளவுக்கு பாரதியின் சிந்தனைகளை அவரது படைப்புகளின் ஊடாகவே அவர்கள் இருவரும் வெளிச்சமாக்கினார்கள் என்பதை வரலாற்றுபூர்வமாக நிறுவும் முயற்சியாக இந்நூல் கருதப்படுகிறது.

பெரியார் ஈ.வே. ரா அவர்களினால் தொடங்கப்பட்ட திராவிட இயக்கத்திலிருந்தவர்களும் அதிலிருந்து பிரிந்த தி. மு.க.வினரும் பாரதி பார்ப்பனர் குலத்தில் பிறந்த ஒரே ஒரு காரணத்திற்காகவும் தெய்வங்கள் குறித்து அவர் பாடல்கள் புனைந்தமையினாலும் பாரதியை முதலில் ஏற்க மறுத்தனர்.

காலப்போக்கில் தி.மு.க. வின் உருவாக்கத்திற்கு காரணமாகவிருந்த சி. என். அண்ணாதுரை பாரதியை மறு மதிப்பீடு செய்தார். அதானலும் பாரதி குறித்து திராவிட இயக்கத்தினரின் அணுகு முறை மாறியதையும் இந்த நூல் தெளிவுபடுத்தியுள்ளது.

அக்காலத்தில் வாழ்ந்த பண்டிதர் பரம்பரையில் வந்துள்ள பலர் பாரதியின் நவீனத்துவ சிந்தனைகளை ஏற்க மறுத்தனர்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கும் பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு. சி. ரகுநாதன் இந்நூலின் தேவை, முக்கியத்துவம் குறித்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாரதியைத்திரித்துக் கூறுபவர்களுக்கு எதிராக ஜீவா தொடங்கிய இயக்கம், உண்மையில் 1947க்குப் பின்னர்தான், அதாவது இந்தியா சுதந்திரமடைந்த பின்னர்தான் சூடுபிடித்தது. காரணம் இந்திய அரசியல் சுதந்திரம் பெற்றவுடனேயே, பாரதியின் பொருளாதார, சமுதாய லட்சியங்களை மறைக்கவும் மறுக்கவும் விரும்பியவர்கள் பாரதியைத் திரித்துக்கூறும் முயற்சிகளும் அதிகரித்தன. எனவே, ஐம்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில், அத்தகையோருக்கும் எதிராக இத்தகையதோர் இயக்கத்தை நடத்துவது ஒரு சரித்திரத் தேவையாகவே மாறிவிட்டது.

இந்த இயக்கத்துக்கு முன்னோடியாகவும் முதல்வராகவும் இருந்த தோழர் ஜீவா மறைந்த பின்னர், அவர் தோற்றுவித்த தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் இந்த இயக்கத்தை மேலும் முன்கொண்டு சென்றது. இறுதியில் ஜீவா தொடக்கிவைத்த இயக்கமும், சமூகத்தேவைகளின் காரணமாக வளர்ந்தோங்கி வந்த பாரதியின் தாக்கமும் சேர்ந்து பாரதியைப் பலவாறும் திரித்துக்கூற முயன்றவர்களின் வாயை அடைக்கச் செய்துவிட்டன.

இதுதான் பாரதி மகாகவியாக அங்கீகரிக்கப்பட்டு நிலைபெற்றுவிட்ட வரலாறாகும். இந்த வரலாற்றை இந்நூலாசிரியர்கள் தர்க்கவியல் முறையில் தடம் கண்டறிந்து தக்க ஆதாரங்களோடும் மேற்கோள்களோடும் நமக்கு இனம் காட்டியுள்ளனர். இந்நூலின் மூலம் பாரதி சகாப்தம் பற்றிய வரலாற்றில் நமக்கு அத்தியாவசியமான

## முருகபூபதி

ஒரு சரித்திரத்தேவை பூர்த்தியாகிறது என்றே சொல்லலாம்.

என்றாலும், சரித்திரம் என்பது, எந்தவொரு கட்டத்திலும் முற்றுப்புள்ளி வைத்து, முடிவுறுவதல்ல. ஒரு கட்டத்தின் முடிவு அடுத்த கட்டத்தின் தொடக்கமேயாகும். பாரதி மகாகவிதான் என்பது உலகுணர நிலைநாட்டப்பெற்றுவிட்ட இந்நாளையிலும்கூட, பாரதியை திரித்துக்கூற முயலும் சில கீச்சுக்குரல்கள் அவ்வப்போது ஒலிக்கத்தான் செய்கின்றன. எனவே பாரதியின் உண்மையான பெருமையை உலகம் மேலும் நன்குணரச்செய்யும் பணியில் ஈடுபாடுள்ளவர்கள், இன்றும் புதிய புதிய தகவல்களை கண்டறிந்து இந்த வரலாற்றை மேலும் செழுமையாக்கி வளர்ப்பதற்கும் இந்த நூல் ஒரு தூண்டுகோலாகவும் அடிப்படையாகவும் துணையாகவும் நின்று நிலவும் என்பதே எனது நம்பிக்கை.

"பாரதி - மகாகவி விவாதத்தின் பல்வேறு கோணங்களையும் பக்கச்சார்புகளையும் அறிந்துகொள்வதே எமது முயற்சி. அதனை இயன்றளவு இதில் விவரித்துள்ளோம். இந்நூல் வரலாற்றுப்பொருள் முதல்வாத அணுகுமுறையினடியாக வருவது. வரலாற்றுப்பொருள் முதல்வாதம் நம்மைப்பொறுத்த மட்டில் வெறும் அணுகும்முறை வாய்பாடல்ல, எண்ணித்துணிந்த ஒரு கருத்தியல் நிலைப்பாடு" எனச்சொல்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

இந்த ஆய்வும் இதன் அவசியமும் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பது: "பாரதியின் பெருமை ஒன்றுதான். அவனுக்குப்பின் வந்த எந்த உண்மையான, நேர்மையான கவிஞனாலும் அவனை மறுதலிக்கும் ஆக்கத்தைப் படைக்க முடியவில்லை. இந்த ஒரு பண்புதான் மகாகவி என்பானது இலச்சினை. அவனுக்குப்பின்னர் அந்த இலக்கியப்பாரம்பரியம் அவனுக்கு முன் இருந்ததுபோல் இருந்திருப்பதில்லை. அதை அவன் திசை திருப்பிவிடுகிறான்."

"இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழிலக்கிய வரலாற்றில் பாரதியின் இடம் பற்றிய சிந்தனை, இலக்கியத்திலும், சமூகவியலிலும், கலை இலக்கியங்களின் சமூகப்பயன்பாடுகளிலும் ஆர்வம்தோன்றிய காலம் முதற்கொண்டே எனக்கிருந்ததுண்டு. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழிலக்கியத்தின் போக்கையே திசை திருப்பிவிட்டவன் பாரதி என்கிற கருத்து, என்னைக்கவர்ந்த தமிழறிஞர்களின் கருத்துக்களால் உறுதிப்பட்டது. அதிகம் உணர்ச்சிகளுக்கிடங்கொடாமல், முற்றிலும் அறிவுபூர்வமாகச் சிந்தித்து, ஆணித்தரமாகத் தம் கருத்துகளைக் கூறுபவர்களும், தமிழாராய்ச்சிப்பாதையில் முக்கிய மைல் கல்களெனப் போற்றப்பெறுபவர்களுமாகிய பேராசிரியர்கள் வையாபுரிப்பிள்ளை, சிவத்தம்பி, கைலாசபதி ஆகிய மூவருமே பாரதியிடம் நெருங்கியதுமே நிலை தடுமாறிச் சொக்கிப்போய் நிற்கிற வேடிக்கையை நான் பலமுறை ரசித்ததுண்டு. "என பதிவுசெய்துள்ள மார்க்ஸ், "பேராசிரியருடன் ( சிவத்தம்பி) இணைந்து பணியாற்றுவதென்பது பெருமைக்குரிய ஒரு பணிமட்டுமல்ல, அது ஒரு மகிழ்ச்சிகரமான பணியுங்கூட என்பதை அவருடன் பணியாற்றும் பேறு பெற்றோரே உணர்வர். பேராசிரியரை ஆசான் எனப்போற்றுவது எனக்கு பெருமை சேர்க்கிற விடயம். அது அவருக்கும் பெருமையளிக்கத்தக்கதாக இருக்குமாறு என் எதிர்காலப்பணிகள் அமைய வேண்டும் என்பது என் விழைவு" எனவும் சொல்கிறார்.

நூற்றுக்கணக்கான சான்றாதரங்களுடனும் பாரதி காலத்திலும் பாரதியின் மறைவையடுத்து உடனடியாகவே ஊடகங்களில் வெளியான செய்திகளின் பின்னணியிலும் ஆய்வுசெய்யப்பட்டுள்ள இந்நூலில், பாரதியின் மறைவு முதல் 1935 இல் நிகழ்ந்த முதல் சர்ச்சை தொடக்கம், பின்னாளில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பாரதியை பயன்படுத்திய முறைமை, பொது மக்களும் திராவிட

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# ‘மகாவம்சம்’ எழுதப்பட்டவரலாறு!




"மகாவம்சம்" மூல நூல் இலங்கையின் பண்டைய இதிகாசம் தொடக்கம் கி.பி 301 வரையான மாகாசேனன் மன்னரின் காலப்பகுதிவரை மகாநாம தேரரால் எழுதப்பட்டது. அதுமுதல் 36 அத்தியாங்களைக் கொண்டது. 37வது அத்தியாயத்தை அவர் எழுதிக்கொண்டிருக்கும் போது மகாநாம தேரர் மரணமாகிவிட்டார். அது 50 செய்யுள்களைக் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் "அத்தியாயம் நிறைவுற்றது" என்று குறிப்பிட்ட அவர் 37வது அத்தியாயத்தில் அப்படி குறிப்பிடாததால் அவர் அந்த அத்தியாயத்தை முடிக்கவில்லை என்றும் தொடரவிருந்தார் என்றும் பல ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன.

2வது தொகுதி கி.பி 301 முதல் கி.பி 1815 வரையான ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டில் வரும் வரையான காலப்பகுதியைப் பதிவு செய்கிறது. அது மூன்று பாகங்களைக் கொண்டது.

முதலாவது பாகம் - மன்னர் கித்சிறிமேவன் அரசரின் காலம் தொடக்கம் மகாபராக்கிரமபாகுவின் காலம் (302-1186) வரையான 884 ஆண்டுகளைப் பதிவு செய்கிறது. மொத்தம் 42 அத்தியாயங்களைக் கொண்டது அது.

இரண்டாவது பாகம் – 1186-1357 வரையான விஜயபாகு மன்னர் காலத்திலிருந்து ஸ்ரீ ஐந்தாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் வரை 171 வருட காலத்தைப் பதிவு செய்கிறது.

மூன்றாவது பாகம் – 1357-1815 வரையான விஜயபாகு மன்னர் காலத்திலிருந்து ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் காலப்பகுதிவரை 441ஆண்டுகளைப் பதிவு செய்கிறது. ஆட்சி முழுமையாக அந்நியர் கைகளில் சிக்கும் வரையான காலப்பகுதி இது.

இரண்டாவதுதொகுதி

இதை எழுதிய பிக்கு பற்றிய தகவல்களை பின்னைய பல ஆய்வாளர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். மேற்படி 2ஆம் தொகுதியின் முதலாவது பாகத்தை அதாவது 37ஆவது அத்தியாயத்தின் 51வது பகுதியிலிருந்து 79வது அத்தியாயம் வரை தம்பதெனிய பகுதியில் வாழ்ந்த தர்மகீர்த்தி என்கிற பௌத்த பிக்கு எழுதியதாக பேராசிரியர் வில்ஹைம் கைகர் குறிப்பிடுகிறார். முதலாவது பராக்கிரமபாகு காலத்தை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் சிறிமா விக்கிரமசிங்க போன்ற பல ஆய்வாளர்களும் அதனை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் பேராசிரியர் மங்கள இலங்கசிங்க போன்றோர் இதனை மறுக்கிறார்கள். 38வது அத்தியாயத்திலிருந்து 54வது அத்தியாயம் வரையான பகுதியை மகாவிராயைச் சேர்ந்த பிக்குகள் சேர்ந்து எழுதியதாகவும், முதலாவது பராக்கிரமபாகு காலத்தை உள்ளடக்கிய 54வது அத்தியாயத்திலிருந்து 79வது அத்தியாயம் வரையான 25 அத்தியாயங்கள் பொலன்னறுவையில் வசித்த பராக்கிரமபாகு மன்னரின் குடும்ப நட்பு கொண்டிருந்த ராஜகுரு தர்மகீர்த்தி என்கிற பிக்குவால் எழுதப்பட்டது என்றும் பேராசிரியர் மங்கள இலங்கசிங்க விபரிக்கிறார்.

79இலிருந்து 90வது அத்தியாயம் வரை அதே தம்பதெனிய தர்மகீர்த்தி தேரர் தான் எழுதியதாக பதிவுகள் இருந்தாலும் மகாவம்சத்தின் இரண்டாம் தொகுதியை சிங்களத்துக்கு மொழிபெயர்த்த ஹிக்கடுவ சுமங்கள தேரர் உள்ளிட்ட இன்னும் சிலர் அதை மறுக்கிறார்கள். 79வரையான அத்தியாங்கள் வரை எழுதப்பட்ட வடிவத்தில் அதற்கடுத்த அத்தியாயங்களில் எழுதப்படவில்லை என்றும் மொழிநடையில் உள்ள வித்தியாசத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இந்த விபரங்கள் பற்றிய ஆய்வாளர்களின் முரண்பட்ட கருத்துக்கள் அத்தனையையும் இறுதியாக இந்த வருடம் வெளிவந்த மகாவம்சத்தின் 6வது தொகுதியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

91-100 வரையான அத்தியாயங்களை கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் கண்டி ராஜ்ஜியத்தைச் சேர்ந்த (அக்காலகட்டத்தை செங்கடகல ராஜ்ஜியம் என்று அழைப்பார்கள்) திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த புத்தரக்கித்த மகாநாயக்க தேரரால் எழுதப்பட்டதை மகாவம்சம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

101வது அத்தியாயம் ராஜாதி ராஜசிங்கன் மற்றும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆகிய மன்னர்களைப் பற்றி சுருக்கமாக 29 செய்யுள்களில் எழுதப்பட்டபடி முடிக்காமல் இருக்கிறது. ஸ்ரீ சித்தார்த்த புத்தரக்கித்த மகாநாயக்க தேரர் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்திலேயே மரணித்துவிட்டதால் இந்த 101வது அத்தியாயம் அவரால் எழுதப்பட்டிருக்காது என்பதை பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

மூன்றாவது தொகுதி

இது 1815 இல் இலங்கை முழுவதுமாக அந்நியர் வசமானது தொடக்கம் 1936 வரையான காலப்பகுதியை பதிவு




செய்கிறது. இதை "மஹாவம்சோ" என்று பெயரில் யகிரல பஞ்ஞானந்தாஹிதான நாயக்க தேரோவால் 101வது அத்தியாயத்தின் 31வது செய்யுளிலிருந்து 114வது அத்தியாயம் வரையான 11 அத்தியாயங்களைக் கொண்டது. மகாவம்சத்தின் 2வது தொகுதியில் காலனித்துவ ஆக்கிரமிப்பு கால அரசியல், பொருளாதார, ஆன்மீக, மாற்றங்கள் பற்றிய விபரங்களின் போதாமையால் இந்த 3வது தொகுதியின் அறிமுகத்தில் சில மேலதிக விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு அதில் ஒரு பந்தி

"மன்னன் ஸ்ரீ விக்கிரம சிங்கவை அரியாசனத்திலிருந்து அகற்றி அன்று ஆங்கிலேயர்களின் பிடியில் இருந்த அரச உரித்துடைய இளவரசன் முத்துசாமிக்கு விசேட கொடுப்பனவுகளையும் சலுகைகளையும் வழங்கி யாழ்ப்பாணத்தில் குடியேற்றிவிட்டு அந்த அரியாசனத்தை பிலிமத்தலாவுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஆளுனர் பிரடிக் நோர்த்துக்கும் பிலிமத்தலாவ மகா அதிகாரத்துக்கும் இடையில் 1803 இல் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது" என்கிறது. இந்தப் பதிவு முக்கியமானது.

நான்காவது தொகுதி

இது 1936-1956 வரையான காலப்பகுதியை பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர தலைமையிலான குழு இதனை முடித்தது. 115-124 வரையான அத்தியாயங்களைக் கொண்ட இந்த தொகுதிதான் முதன்முதலில் பௌத்த பிக்குகள் தவிர்ந்த வரலாற்றாசிரியர்களின் பங்களிப்போடு எழுதப்பட்டது. மேலும் இது தான் முதன் முதலில் அரசால் அமைக்கப்பட்ட குழுவால் எழுதப்பட்டு 1986இல் வெளியிடப்பட்ட தொகுதி. இந்தத் தொகுதியிலிருந்து தான் மகாவம்சத்தை எழுதும் நிரந்தர பொறுப்பை அரசு கையேற்கிறது.

ஐந்தாவது தொகுதி

இது 1956 முதல் 1978 ஜே ஆரின் இரண்டாவது குடியரசு ஆட்சி தொடங்கும் வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய 125-129 வரையான அத்தியாயங்களைக் கொண்டது. பேராசிரியர் பெல்லன ஸ்ரீ ஞானவிமல மகாநாயக்க தேரரின் தலைமையிலான பண்டிதர் குழுவால் தயாரிக்கப்பட்டது இது. அரச கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்தப் பணிகள் முடிந்தன.

இதற்கிடையில் "மகாவம்ச காவியத்தை" அரசுக்கு வெளியில் பல தனியார் வெளியீட்டு நிறுவனங்களும் முன்னைய தொகுதிகளை தமது ஆய்வுரைகளுடன் நேரடியாக வெளியிட்டிருக்கின்றன. பேராசிரியர் ஆனந்த குருகே மகாவம்சத்தின் முதலாவது தொகுதியை தனது சொந்த ஆய்வுடன் சேர்த்து 1986இல் ஆங்கிலத்தில் வெளியிட்டார். அந்த தொகுதி அரசு வெளியிட்ட தொகுதியை விட பிரசித்தம் பெற்றது. 1129 பக்கங்களைக் கொண்ட அந்த முதலாவது தொகுதியில் முதல் 487பக்கங்கள் மகாவம்சம் எழுதப்பட்ட வரலாறு, அதன் மொழி, உள்ளடக்க அர்த்தப்படுத்தல், வியாக்கியானங்கள் என்பன பற்றிய விமர்சனபூர்வமான பதிவுகளைக் கொண்டது.

ஆறாவது தொகுதி

என்.சரவணன்

இது இரண்டு பாகங்களாக 2018 ஒகஸ்டில் வெளியிடப்பட்டது. அதாவது 32வருடங்களுக்குப் பின் வெளியிடபட்டிருக்கிறது. 1978 – 2010 வரையான காலப்பகுதியை 130-133வது அத்தியாயம் வரை பதிவு செய்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் ஆயுத வடிவம் கொண்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் தோன்றி பின் நசுக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டது எனலாம். அதாவது வரலாற்றை பதிவு செய்யும் இலங்கை அரசின் "இனப்பிரச்சினை பற்றிய" உத்தியோகபூர்வ பார்வை/கொள்கை முடிவு என்ன என்பதை விளக்கும் ஆவணம் எனலாம்.

6வது தொகுதியின் முதலாவது பாகத்தில் 199வது பக்கத்தில் 83 யூலை கலவரம்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## பிறமொழி தெரியாவிடின் ஏனைய மொழிக்காரர் மத்தியில் மறுமொழி கூற வழியின்றி ஊமையாய் இருக்க நேரிடும்



படுவான் பாலகன்

'தாய்மொழியைவிட பிறமொழி தெரியவில்லையாயின் நாம் ஊமைதான் இதனை கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் பாடசாலையில் நடைபெற்ற நான்கு மதத்தினைச் சேர்ந்த மாணவர்களும், மதகுருவினரும் பங்கேற்றிருந்த நிகழ்வொன்றில் கண்டேன்' என, கொக்கட்டிச்சோலை சந்தியில் வேல்ராஜாவும், விகஸ்டியும் பேசிக்கொண்டிருந்த போது வேல்ராஜா குறிப்பிட்டார்.

சமய மற்றும் கலாசார விழாக்களை ஒன்றிணைந்து கொண்டாடும் வேலைத்திட்டத்தின் கீழ், மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்கான நத்தார் பண்டிகை நிகழ்வு கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் வித்தியாலயத்தில் கடந்த மாதம் 29ம் திகதி நடைபெற்றது. இதில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச்சேர்ந்த மதகுருவினர் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இவர்களுடன், நான்கு மதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர். இந்து மதத்தினையும், கிறிஸ்தவ மதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா, பண்டாரியாவெளி, மாவடிமுன்மாரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் மட்டக்களப்பு வலயத்திற்குட்பட்ட தாழங்குடா சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களும் பங்கெடுத்திருந்தனர். இஸ்லாம் சமயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், ஒல்லிக்குளம் அல்ஹம்றா வித்தியாலய மாணவர்களும், பௌத்த சமயத்தினைச் சேர்ந்த மகோயா கெப்பிடிபொல வித்தியாலய மாணவர்களும் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை நாட்டின் தேசியக் கொடியை நான்கு மதத்தினைச்சேர்ந்த உடையணிந்தவர்களும் ஏந்தி அதிதிகளை பாடசாலைக்குள் அழைத்து வந்தனர். அதனையடுத்து நான்கு மத பிராத்தனைகளும் நடைபெற்றன. பிரார்த்தனைகளைத் தொடர்ந்து, அனைவரும் கதிரைகளில் அமர்ந்து கொண்டனர். நான்கு மதத்தினைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரையும், ஒன்றிணைக்கும் வகையில் மேசைகளைச் சுற்றி வட்டமாக கதிரைகள் இடப்பட்டிருந்தன. அருகருகே நான்கு மதத்தினைச் சேர்ந்த மாணவர்களும் அமருவதற்குகேற்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதேவேளை நான்கு மதத்தலைவர்களும் அருகருகே அமர்ந்துகொண்டனர்.

நான்கு மதத்தலைவர்களின் ஆசியுரைகளும் இடம்பெற்றன. இதில் ஒவ்வொரு மதத்தினரும், வேறு மதத்தினை மதிக்கும் தன்மைபற்றி, தமது மதங்களில் சொல்லப்பட்ட விடயங்களை எடுத்துக்கூறினர். இதன்மூலம் மற்றைய மதங்களுக்கு ஒவ்வொருமதங்கள் கொடுக்கும் முன்னுரிமை மாணவர்கள் மத்தியில் தெளிவாகப்பட்டதுடன், இனநல்லுறவின் அவசியத்திற்கு புரிந்துணர்வே அவசியமென்ற கருத்தினையே நான்கு மதத்தலைவர்களும் வலியுறுத்தியிருந்தனர். இங்கு நான்கு மதத்தினர் பங்கேற்றிருந்தாலும், இவர்கள் இரண்டுமொழி பேசுபவர்களாவே காணப்பட்டனர். குறிப்பாக பௌத்த சமயத்தினர் சிங்கள மொழியினைப் பேசுபவர்களாக காணப்பட்ட அதேவேளை, ஏனைய மூன்று மதத்தினரும் தமிழ் பேசுபவர்களாக இருந்தனர். இதனால் பௌத்த மாணவர்களுடன் ஏனைய மூன்று மதத்தினரும் அல்லது பௌத்த மாணவர்கள் ஏனைய மூன்று மதத்தவருடனும் பேசுவதில் சிரமங்களை எதிர்கொண்டனர். குறிப்பாக பௌத்த மத மாணவர்கள் மத்தியில் ஏனைய மூன்று மத மாணவர்களும் ஊமை போன்றவர்களாகவே காட்சிகொடுத்தனர். தமக்கிடையில் பேசி அன்பை வெளிப்படுத்தி புது நட்பினை தேடிக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் இவர்கள் மத்தியில் காணப்பட்ட போதிலும், இங்கு மொழி இடையூறாகவிருந்ததாக வேல்ராஜா விகஸ்டிடம் கூறினான்.

இலங்கை நாட்டின் அரசகரும மொழிகளாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டும் இருக்கின்ற அதேவேளை, அரச

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## உலகம் அழகாகிவிடும்

சிவச்சந்திரன் சிவஞானம்

ஒரு கணவர் மூன்றுமாத கர்ப்பிணியை கிளினிக் அழைத்து வந்திருந்தார். அடுத்த



கிழமை மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் செல்ல இருப்பதால் அவர் குழந்தை பிறக்கும்போது அவரால் இங்கே இருக்க முடியாது என்ற ஏக்கம் அவரிடம் இருந்தது. இரண்டு வருடங்களின் பின்னர்தான் வரமுடியும் என்பதால், குழந்தை பிறந்து ஒரு வயதான பின்னர்தான் அவரால் குழந்தையைத் தூக்கிக் கொஞ்ச முடியும்.

ஸ்கேன் பண்ணும்போது டொக்டர் பிள்ளையைப் போட்டோ எடுக்க முடியுமா என்றார்.

இங்கே இருக்கும் 2D ஸ்கேன் மெசினில் குழந்தையின் முகத்தைத் தெளிவாக காட்ட முடியாது. படத்தில் இருப்பதுபோல ஒரு வியூவில் குழந்தையின் உருவத்தைப் பிரிண்ட் எடுத்துக்கொடுத்துவிட்டு, குழந்தை அசைவதை அவர் மொபைலில் வீடியோ எடுக்க அனுமதித்தேன். தளும்பும் குரலில், இது போதும் டொக்டர், இதைப்பார்த்துக்கொண்டே காலத்தை ஓட்டிவிடுவேன் என்று விடைபெற்றார்.

உழைப்புக்காக தன் கர்ப்பிணி மனைவியை விட்டுவிட்டு தூர இடங்களுக்குச் சென்று, பிறந்த குழந்தையை வருடக்கணக்கில் தூக்கிக் கொஞ்ச முடியாத அப்பாக்கள் போற்றப்படப்படவேண்டியவர்கள்.

அதேபோல் கணவன் இல்லாமல் தனியாக குழந்தையைப் பெற்று வளர்க்கும் மனைவிகள் இன்னும் போற்றப்படவேண்டியவர்கள். அதே நாளில் இன்னொரு பெண், கல்யாணத்துக்கு முன்பே கர்ப்பமாக, காதலன் விட்டுவிட்டு ஓடிவிட்டான். குழந்தையை என்ன செய்யப்போகிறீர்கள் என்றேன்.

நானே வளர்க்கப்போகிறேன் டொக்டர். பிள்ளைக்காகவாவது வருவார் என நம்புறன் என்று கண்ணீருடன் சொல்லி முடித்தார் அந்தப்பெண்.

தன்னுடைய பிள்ளை கருவில் வந்தபின் மனைவியை விட்டுவிட்டு ஓடுபவர்களின் மனது கொலைகாரனின் மனதைவிடக் கொடுமையானது.

அம்மாக்கள் எப்படியோ பிள்ளைகளை நேசித்து விடுவார்கள்.

அப்பாக்கள் அனைவரும் தங்களுடைய பிள்ளைகளை நேசித்தாலே போதும். உலகம் அழகாகிவிடும்.



# மட்டக்களப்பு மாநகர சபை

මඩකලපුව මහනගර සභාව

BATTICALOA MUNICIPAL COUNCIL

மட்டக்களப்பு மாநகர சபை

**2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்.**

மட்டக்களப்பு மாநகர சபையினால் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01 ஆந்திகதிய பொதுச் சபைக் கூட்டத் தீர்மான இலக்கம் 13 இன் கீழ்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச சட்டம் 230,247 இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின்படி மட்டக்களப்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட ஆதனங்களின் 2019ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 பிரிவின் (1) உட்பிரிவு 239 ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புக்களின் வருடாந்த பெறுமதிக்கு 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய வரி மதிப்பீட்டிற்கு அமைவாக 2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாக நிறைவேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி விலை மதிப்பீட்டின் (ஆண்டுப் பெறுமதி) அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286 ஆ பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்பட வேண்டிய கட்டளைச் சட்டத்தின் 230(1), 230(1A), 230(1AA), பிரிவினுல் உள்ள ஏற்பாடுகளுக்கு அமையவும், புதிய வட்டார எல்லை நிர்ணயங்களுக்கு அமையவும் அவற்றை பின்வரும் அட்டவணை I இன் பிரகாரம் 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை I**

| வட்டாரங்கள் | வதிவிடங்கள் | வர்த்தக ஸ்தாபனங்கள் | வெற்று நிலம் | அரச ஆதனங்கள் |
|---|---|---|---|---|
| நகர்ப் பிரதேசங்கள் 8,9,10,11,17,18 | 7% | 8% | 25% | 15% |
| புறநகர்ப் பிரதேசங்கள் 4,5,6,7,13,14,15,16 | 6% | 7% | 20% | 15% |
| கிராமங்கள் 1,2,3,12,19,20 | 5% | 6% | 15% | 15% |

மேலும் 2019ம் ஆண்டில் தங்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை முழுமையாகவோ, அல்லது அட்டவணை II ல் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொறு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீத வரியை மட்டக்களப்பு மாநகர சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீத வரி 2018 ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் திகதி தொடக்கம் 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தப்படுமாயின் வருடாந்த வீத வரி தொகையில் பத்து வீதமான (10%) கழிவும் அட்டவணை II இன்படி ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தெகையை மட்டக்களப்பு மாநகரசபை நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் ஐந்து வீதமான (5%) கழிவும் வழங்கப்படுவதுடன், ஆதன வரி செலுத்தப்படாதுவிடத்து வதிவிடங்களுக்கு 15% மும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 20% மும் தண்டப்பணமும் அறவிடப்படும் என்று தீர்மானிக்கின்றது.

**அட்டவணை II**

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5 % கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | பங்குனி 31 | ---- |
| இரண்டாவது காலாண்டு | ஆனி 30 | சித்திரை 30 |
| மூன்றாவது காலாண்டு | புரட்டாதி 30 | ஆடி 31 |
| நான்காவது காலாண்டு | மார்கழி 31 | ஐப்பாசி 31 |

தி.சரவணபவன்,
மாநகர முதல்வர்

தி.சரவணபவன்
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.

2018 கார்த்திகை 23
மட்டக்களப்பு
மாநகர சபை.

## விழிப்புணர்வு வீதிநாடகம்



மட்டக்களப்பு காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பெண்கள் சுய அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் 03.12.2018 அன்று காலை 09.00 மணியளவில் நடைபெற்றது. இதன்போது மட்டக்களப்பு எங்கள் ஆசான் அரங்கியல் கலைபீட மாணவர்களுடன், காவியா நிறுவனத்தின் மூலம் தலைமைத்துவப் பயிற்சி பெற்ற மாணவர்களும் இணைந்து பெண்கள் சுய அபிவிருத்தி எனும் தொனிப்பொருளில் அமைந்த விழிப்புணர்வு வீதிநாடகம் ஒன்று ஆற்றுகைப்படுத்தப்பட்டது. இவ் ஆற்றுகையில் பங்குபற்றிய மாணவர்கள் நெறியாளர் R.N.R. அரவிந் மற்றும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் போன்றோரை படத்தில் காணலாம்.

தொடர்ச்சி...

## மோசமான காலநிலை இடர்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கைக்கு இரண்டாம் இடம்

நகரில் புதனன்று நடந்த வருடாந்த காலநிலை மாநாட்டில் வெளியிடப்பட்டன. தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான மழை காரணமாக 2017இல் இலங்கையில் பெரும் வெள்ளமும் தொடர்ச்சியான மண்சரிவும் ஏற்பட்டன. 2003 முதல் இங்கு மழையால் 200 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 12 மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக அப்போது 6 லட்சம் பேர் இடம்பெயர்ந்தனர். மிக அதிகமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 20,000 பேர் பாதிக்கப்பட்டனர். 1998 முதல் 2017 வரை உலகமட்டத்தில் காலநிலை இடர்கள் குறித்த 11,500 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மோசமான காலநிலையால் உலகெங்கும் இந்தக் காலகட்டத்தில் 11,500 பேர் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சி...

## சிவானந்தா பழைய மாணவர் சங்கவைரவிழா!

கல்லடி உப்போடை சிவாநந்த தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க வைரவிழா அண்மையில் சங்கத்தலைவர் முருகேசு முருகவேள் தலைமையில் நடைபெற்றபோது அங்கு 'சிவாநந்தயுகம்' என்ற வைரவிழாமலரும் 'வெள்ளைமல்லிகை' என்ற இறுவெட்டும் 'சிவானந்தியன்' என்ற இறுவெட்டும் வெளியிட்டுவைக்கப்பட்டன. இ.கி.மிசன் மட்டு.மாநில பொதுமேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஸஜானந்தா ஜீ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்தகொண்டு இவற்றை வெளியிட்டுவைப்பதைக்காணலாம்.

படங்கள் காரைதீவு வி.ரி.சகாதேவராஜா

அரங்கம் செய்திகள்

விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

Are you 18+ and have GCSEs or work experience?

Do you have A levels but missed your place at university?



- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# அரங்கத்தினால் இலவச பயிற்சிப்பட்டறை

வயதெல்லை:- 18 - 25
தகைமை- க.பொ.த உயர்தரம்
க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளுக்காகவும் பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருப்போரும் வரவேற்கப்படுகின்றனர்.

**20 பேருக்கான வாய்ப்புக்கள் உள்ளன..**

வளவாளர்:- ஆனந்தாஜோசப்(லண்டன்)
பயிற்சிக்கால அடிப்படை கொடுப்பனவுகள் வழங்கப்படும்..

ஜனவரியில் பயிற்சிகள் ஆரம்பமாகும்.

**காலம் – 6 மாதம்**

- Communication skill,
- Business skill,
- Research skill,
- Marketing skill,
- Project writing skill

டிசம்பர் 20ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் சுயவிபரக்கோவையை ; அரங்கம், இல.227 பார் வீதி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# மட்டு மாநகரசபை



## சுற்றுலாத்துறையில் உள்ளூர் நிபுணர்கள் தேவை

மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களின் பற்றாக்குறை காரணமாக சுற்றுலாத்துறையின் 95 சதவீத உயர் பதவிகளுக்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இணைக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவான் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை ஊக்குவிக்கும் முகமாக சுப்ரீம் செப் சமையல் கலைஞர்களுக்கிடையிலான போட்டியின் ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை (01) மாலை மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவுஸ்திரேலியநாட்டின் நிதியுதவியில் இலங்கை திறன் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து மேற்படி சுற்றுலா விருந்தோம்பல் துறை ஊடாக இலங்கைக்கும் இலங்கை மக்களும் அடையக்கூடிய நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மட்டக்கப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், மட்டக்களப்பு மாநகரசபை மேயர் தி.சரவணபவான், அவுஸ்ரேலிய தூதரக பிரதானி ஆர்.சிவசுதன், உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் குழுத் தலைவர் டேவிட் அப்லெட், குழு துணை தலைவர் கமலநாதன் ஜெயதாஸ், லூஸ்க் அமைப்பின் பிரதிநிதி எஸ். யோகேஸ்வரன், உட்பட பலர் கலநதுகொண்டனர். சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் முகமாக மட்டக்களப்பு மாநகரசபையினால் 1000 நாள் வேலைத் திட்டம் 1000 வேலைவாய்ப்பு என்ற தொனிப் பொருளில் திட்டமொன்றினைத் தயாரித்துள்ளோம். 24 சுற்றுலா மையங்களை விருத்தி செய்து 1000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு எமது மாவட்டத்திற்கு சுற்றுலா பணிகளாக வருபவர்கள் குறைந்தது இரண்டு நாட்கள் தங்கியிருந்து 1000 டொலர்களை செலவு செய்து மக்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் எங்களது நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்தம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்துடன் 46 சதவீதமான 5650 இளைஞர்கள் இடைவிலகுகிறார்கள். இவர்களுக்கு சரியான வழிகாட்டல் இல்லாதவிடத்து அனைவரும் சாதாரண தொழிலாளி வர்க்கத்தில் இணைவார்கள். இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக மாற்று வழிகளை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்களிப்புச் செய்யக்கூடிய துறைகளில் ஒன்றான சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து எமது பிரதேச இளைஞர் யுவதிகளை இந்தத் துறைகளில் உள்வாங்கி அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாக எமது மாவட்டம் அமைய வேண்டும். நாட்டில் 2030ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பாரிய அபிவிருத்தி திட்டங்களை ஆய்வு செய்யும்போது சுற்றுலாத்துறை மற்றும் கட்டுமானத்துறைலும் அதிக வேலைவாய்ப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலம் நாங்கள் எதிர்பார்க்கின்ற வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டுமானால் எமது இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்து திறமையான தொழில்சார் நிபணத்துவம் கொண்ட ஊழியர் படையணியை உருவாக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள் பற்றாக்குறை காரணமாக சுற்றுலாத்துறையில் உயர் பதவிகளுக்கு 95 சதவீதமானவர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துள்ளார்கள். எமது மாவட்டத்தின் கலாசாரம் பண்பாடுகள், சுற்றுலாத்துறை சார்ந்த போதிய தொழிவு இன்மை, பயிற்சி நிலையங்கள் இல்லாமை போன்ற காரணங்களினால் எமது இளைஞர்கள் சுற்றுலாத்துறையைத் தெரிவு

**அதிரன்**

## வாவியோரச் சுத்தப்படுத்தல் நடவடிக்கை





பொதுமக்களினது முறையற்ற கழிவகற்றல் செயற்பாடுகளின் காரணமாக, மட்டக்களப்பு மாநகரைச் சூழவுள்ள நீர் நிலைகள் மாசடைந்து வருவதனைக் கருத்திற் கொண்டு மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார பிரிவானது வாவிகளை அண்டிய சூழலைச் சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.



உக்காத பிளாஸ்டிக் பொருட்களையும், பொலித்தின் பைகளையும், மதுபானக் குவளைகளையும் வாவிகளினுள் வீசுவதனால் நீர் நிலைகள் மாசடைவதோடு அதனை அண்டி வாழும் மக்கள் பெரும் சுகாதார சீர் கேடுகளுக்கு முகங்கோடுக்க நேரிட்டுள்ளது.

அத்துடன் நீர் வாழ் உயிரினங்களும், கண்டல் தாவரங்களும் அழிந்து வரும் நிலையும் உருவாகியுள்ளது. இதன் காரணமாக மாநகரின் தூய்மையினையும், நகரின் அழகையும் பேணும் வகையில் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா (JICA) மற்றும் அவுஸ்திரேலியன் எயிட் (Australian AID) தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மட்டக்களப்பு மாநகரசபையானது “தூய்மையான மாநகரம்” எனும் தொனிப்பொருளின் கீழ் வாவிகளைச் சுத்தப்படுத்தும் பணிகளை (01.12.2018) மேற்கொண்டது.

மட்டக்களப்பு மாநகர நிர்வாக எல்லைக்குட்பட்ட சின்ன உப்போடை தொடக்கம் கல்லடி பாலம் வரையிலான பகுதிகளில் வீசப்பட்ட பிளாஸ்டிக் பைகள், போத்தல்கள் மற்றும் பல உக்காத கழிவுப் பொருட்கள் போன்றன அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

## பசுமையையும் அழகையும் வழங்கும் மாநகரசபையின் மரநடுகைத் திட்டம்





மட்டக்களப்பு நகருக்கு பசுமையையும் அழகையும் வழங்கும் மாநகரசபையின் 1000 மரநடுகை திட்டத்தின்கீழ் மரநடுகை நிகழ்வானது 01-12-2018 அன்று யுனிசெப் நிறுவனத்தின் அனுசரனையுடன் மட்டு முதல்வர் தி.சரவணபவான் தலைமையில் திருமலை வீதியில் ஆரம்பமானது. இதில் பாடசாலை மாணவர்களுடன் யுனிசெப் நிறுவனத்தின் உத்தியோகந்தர்கள், மட்டு மாநகரசபை ஆணையாளர் க.சித்திரவேல், பிரதி ஆணையாளர் தனஞ்செயன், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பல இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

**லியோண்**

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## கலையும் சடங்குகளும்

கலையைப் பொதுவாக இரண்டாக வகுக்கலாம்:

1) தனிப்பட்ட கலைகள் (Individual Art)
2) சமூகக் கலைகள்(Community Art)

புத்தமதம் சிங்களக் கலைகளில் சமூகக் கலைகளை வளர்க்க ஊக்கமளிக்கவில்லை என்பர் சரச்சந்திரா. ஆனால் இந்துமதம் இச் சமூகக் கலைகள் வளர உதவி புரிந்தது. தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்துமதம் காவியம், நாடக வளர்ச்சிகளுக்கு 'கதை' கொடுத்து உதவியுள்ளது. வந்து சேர்ந்த இந்து மதங்களான சைவம், வைஷ்ணவம் ஆகியன சமூகக் கலைகள் வளர உதவினவாயினும் அச்சமயங்கள் எல்லாச் சாதி மக்களிடம் மிகுந்த செல்வாக்கினைப் பெறாதபடியினால் எல்லாரிடமும் காணப்பட்ட கலைகளை ஊக்கிவித்தன என்று கூறமுடியாது.



ஆரம்பத்தில் சைவம், வைஷ்ணவமாகிய இருமதங்களும் சமூகத்தின் சாதி அமைப்பிலே உயர்நிலையுள்ள மக்களிடமே சென்றிருக்க வேண்டும். உழவருக்குச் சிவனாம் என்ற கல்வெட்டுத் தொடரும், இன்று சிவன் கோயில்களில் ஆகம விதிப்படி பிராமணர் பூசை புரிவதும் இதற்குச் சான்றுகளாகும். இதனால் உயர்நிலை மக்களிடம் இருந்த கலை வளரவே இவைகள் உதவின. உயர்நிலை மக்களிடம் கண்ணகி அம்மன், மாரி அம்மன் வழிபாடு, வசந்தனாட்டம் என்பன இருந்தன. இவற்றின் வளர்ச்சிக்கு இவை உதவின. வசந்தன் கூத்தில் மகாபாரத, இராமயண கந்த புராண கதைக்கூறுகள் சேர்க்கப்பட்டமை இதற்கு உதாரணங்களாகும்

மாரி அம்மன் வணக்கம் எல்லார் மத்தியிலும் பின்னாற் பரவியது போல இப்பெரும் தெய்வங்களும், அவை பற்றிய கதைகளும் தாழ் நிலை மக்களிடம் சென்றிருக்க வேண்டும். இதனால் அவர்கள் மத்தியிலிருந்த சமய வழிபாடுகளும் கலைகளும் சிறக்க வழி உண்டாயிற்று. கும்பம் வைத்தல், தீப ஆராதனை, கொடிமரம் நிறுத்தல், உருவ வழிபாடு போன்ற முறைகள் பின்னால் வந்த பெரும் தெய்வ வழிபாட்டினின்றும் இச்சிறு தெய்வ வழி பாடுகள் பெற்றனவேயாம்.

சரச்சந்திரர் புத்தமதம், புத்தமதம் சார்ந்த கலைகளையே வளர்த்தது என்றும், ஆனால் கிராமியக் கலாசாரம் புத்தமதத்தினாற் செம்மைப்படுத்தப்படவில்லை; வளர்க்கப்பட வில்லை என்றும் கூறுவர். ஆனால் மட்டக்களப்பிலே சைவ, வைஷ்ணவ பெரும் தெய்வ வணக்க வருகை கிராமியக் கலாசாரத்தை மேலும் வளர்த்தது எனலாம்.

கிராமத் தெய்வங்களுக்கும் பெரும் தெய்வங்களுக்கும் நடத்தப்படும் சடங்குகளினதும் பூசைகளினதும் அடியாக கலைகள் வளர்ந்தன. உள்ளூர்த் தெய்வங்களைப் பற்றி எளிமையான கதைப் பாடல்கள் எழுந்தன. தெய்வங்களைப் போல அபிநயத்து ஆட ஆடல் பிறந்தது. நடந்த நிகழ்ச்சிகளை அபிநயிக்க நடிப்பு பிறந்தது. ஆட்டத்திற்குப் பின்னணியாக உடுக்கு, சிலம்பு, தவில், வாத்தியங்கள் அமைந்தன. இசை பிறந்தது. இத் தெய்வங்களின் உருவங்களையும் அவற்றிற்கு மந்திர வலிமை கொடுக்கும் யந்திரங்களையும் கீற ஓவியம் வெளிப்பட்டது. மண்ணால் அவ் ஓவியங்களைச் செய்கையிலும், அத் தெய்வங்களுக்குரிய கோயில்களை அமைத்துத் தோரண வேலைப்பாடுகள் செய்கையிலும், அமைப்புக்கலை வளர்ந்தது. இத் தெய்வங்கள் சம்பந்தப்பட்ட கதைகளை சமயச் சார்பு அல்லாத சூழலில் நடிக்கும்பொழுது மகுடி, கூத்து போன்ற நாடகங்களும் உருவாகின.°




### சமயச் சடங்குகளும் (Rituals) நாடகமும்

நாடகம், மதச் சடங்குகள் (Rituals) அடியாகத் தோன்றியது என்பது ஆராய்வாளர் முடிவாகும். ஏனைய கலைகளை விட நாடகக்கலை

கூட்டு முயற்சியிற் பிறக்கும் கலையாகும். பிறக்கும்போதே கூட்டு முயற்சியிற் பிறப்பதுபோல அனைவரையும் ஒன்றிணைக்கின்ற கலையாகவும் அது உள்ளது. சுருங்கச் சொன்னால் சமூகக் கூட்டுப் பொதுமையினை நாடகம் ஏற்படுத்துகிறது.

“நாடகத்தின் அச்சாணியான அமிசம் அதன் சமூகக் கூட்டுப் பொதுமையாகும். இச்சமூகக் கூட்டுப் பொதுமையினை நாடகம் எங்கிருந்து பெற்றுக் கொள்கிறது? நாடகம் சமயச் சடங்குகளின் அடியாகத் தோன்றியமையே நாடகத்தின் இப்பண்பினை அதன் மிக முக்கிய பலமாக ஆக்கியுள்ளது.” என்பர் நாடக ஆய்வாளர்கள். பாரம்பரியத்தால் நிறுவப்பட்ட மதத்துடனும், நம்பிக்கைகளுடனும் சம்பந்தப்பட்ட கிரியைகளின் தொகுதியே சடங்குகளாகும். ஒரு குழுவிலிருப்போர் முன்னொரு நாள் தம் குழுவிலிருந்த மூல பிதாக்கள் செய்த செயலை மீண்டும் செய்வதன் மூலம் தாம் இலாபம் பெறலாம் என எண்ணி அதே செயல்களைத் திருப்பிச் செய்தனர்.

அவையே சடங்குகளாயின. இச் சடங்குகளுக்கு அடிப்படை நம்பிக்கை ஐதீகமாகும். ஒரு ஐதீகம் ஒரு குறிப்பிட்ட பொருளாதாரச் சூழலில் நிகழ்த்தப் பட்டது. சடங்கு நடத்தப்பட்ட ஆரம்ப காலங்களிலே இச் சடங்குகளில் அனைவரும் பங்கு கொண்டனர். ஒன்றாக ஆடினர்; பாடினர்; மது அருந்தினர். நிகழ்த்துவோர் ஒரிருவராயினும் சகலரும் அச் சடங்கில் நம்பிக்கையுடையோராயிருந்தனர். அந்நிலையில் அக் குழுநிலையில் உள்ள சகலரையும் அச்சடங்கு பிணைத்து நின்றது. முழுச் சமுதாயத்திற்கும் பொதுவான சடங்கு நடக்கையில் அது ஒரு பெரு விழாவாகவும் அமையும்.

நடத்தப்படும் காலம் அல்லது இடம், நடத்துபவர்கள் என்பவரை அடிப் படையாகக் கொண்டே விழா முக்கியத்துவம் பெறும். மீளச் செய்தலும், தொடர்பு கொள்ளலும் மதச் சடங்குகளில் முக்கியமானவையாகும்.எந்த ஒரு சடங்கும் ஒரு குறிப்பிட்ட பொருளாதாரச் சூழலிலேயே செய்யப்படுகின்றது. சமூக பொருளாதார சூழலே சமயச் சடங்கின் வன்மைப்பாட்டைத் தீர்மானிக்கிறது.

மட்டக்களப்பில் நடைபெறும் கண்ணகி அம்மன் குளுர்த்தியையும் அதனடியாக நடத்தப்படும் கொம்பு முறித்தல் சடங்கினையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். நில மானிய சமூக அமைப்பில் வேளாண்மை விளைவிக்க மழை இன்றியமையாதது. மழை வேண்டி நடத்தப்படும் சடங்கே கண்ணகி அம்மன் குளுர்த்தியும், கொம்பு முறித்தலும். இதேபோல மாரி, அம்மனைக் குளிரப் பண்ணினால் மாரி பெய்யும் என்ற நம்பிக்கையே மாரி அம்மன் சடங்கிற்கு ஆதாரம். உழவர் மத்தியில் மாரி அம்மன் சடங்கு முக்கியத்துவம் பெற்றது. உழவருக்குச் சிவனாம் உடுக்கு மாரி அம்மன்' என்ற கல்வெட்டுத் தொடரினை இங்கு நினைவுகூர்க. கொம்பு முறித்தற் சடங்கில் அனைத்து ஊரும் பங்கு கொள்ளும். முன்னோர் செய்த ஒரு சடங்கைத் தாமும் செய்து பயன்பெற முனைந்தனர் மட்டக்களப்புப் பிரதேச மக்கள். இங்கே போலச் செய்தற் பண்பும், தொடர்பு கொள்ளற் பண்பும் நிகழ்வதைக் காண்கிறோம். ஆனால் பொருளாதாரச் சூழல் மாறுகின்ற பொழுது சடங்கு முன்னர் பெற்றிருந்த முக்கியத்துவத்தை இழக்கிறது. குளங்கள் கட்டப்பட்டு இரண்டு போகம் வேளாண்மை செய்யப்பட்டு, ஆங்கிலேயர் வருகையினால் மழை பற்றிய விஞ்ஞானக் கருத்துகள் பரவியதனால் கொம்பு முறித்தற் சடங்கு தன் முக்கியத்துவத்தை இன்று இழந்து விட்டது. இப்படி முக்கியம் இழப்பினும் அச்சடங்கின் பாரம்பரியம், மரபு காரணமாக அச்சடங்கில் மக்கள் தொடர்ந்து ஈடுபடுவர்

(தொடரும்)

## கொட்டியாரத்தின் மூத்த பத்திரிகையாளர் மறைந்தார்



சம்பூரைச் சேர்ந்த பல்துறை ஆளுமையான கோ.திரவியராஜா காலமானார்.

திரவியராஜா அவர்கள் சம்பூர் மண் தந்த தகைசால் ஆசிரியர், அதிபர், கல்வியதிகாரி என பதவிகளுக்கு பெருமை சேர்த்தவர்.

மிகவும் பிரச்சனைகள் சூழந்த யுத்த காலத்தில் கல்வித் துறையில் கொட்டியாரம் தன்னை தக்க வைத்துக்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய கல்வியாளர்.

சம்பூர் வரலாறு, மூதூர் வரலாறு, ஆகிய நூல்களிலும் வெருகல் கோயில் பற்றிய கட்டுரைகளிலும் தன்னை ஒரு வரலாற்று ஆய்வாளனாக முகம் காட்டியவர். மூதூரில் ஒரு பத்திரிகயாளனாக, முன்னோடியாய் தடம் பதித்ததோடு குறிப்பிடத்தக்க கவிஞராக அடையாளப்படுத்திய பல் துறை ஆற்றல் மிக்க ஒருவரை சம்பூர் மண் இழந்து நிற்கிறது. அரசியலில் தமிழரசுக் கட்சியின் முன்னணி செயல்பாட்டாளராக தமிழ் உணர்வு மிக்கவராக அமரர். தங்கத்துரை பற்றிய கட்டுரைகளும் தமிழர்களின் அபிலாசைகள் பற்றிய உணர்வு மிக்க கட்டுரைகளும் அவரது அரசியல் நிலைப்பாட்டின் உறுதியை வெளிப்படுத்துவன.

காலம் அவரை பிரித்தாலும் அவரின் சமூக,கலை,இலக்கிய அரசியல் பங்களிப்பு காலம் காலமாக நினைவு கூரப்படும்

-- பால சுகுமார்

# கலித்தொகை இன்பம்

## அரசே இது சரியா? அவள் வாடுதல் முறையா?

அவன் நாடாளும் மன்னவன். எல்லோருக்கும் நல்லவன். குடிமக்கள் யாவரும் குறையின்றி வாழும் வகையில் செங்கோட்லாச்சி வருகின்றான். இருளைப் போக்கி உலகிற்கு வெளிச்சத்தைத் தருகின்ற பகலவனைப் போல, தீயவர்களை நீக்கி, தன்னை நாடிவருபவர்களுக்கு நிழல்போல ஆதரவு தருகின்றான். நீதி வழுவாதவன் என்று எல்லோரும் அவனைப் போற்றுகின்றனர். பொய் என்பதை அறியாது, உண்மையையே பேசுகின்ற உயர்ந்தவனாக அவன் திகழ்கின்றான். எப்படிப்பட்டவர்களின் துன்பங்களையும் களைந்து எல்லோருக்கும் நல்லதையே செய்கின்றான். இவ்வாறு குடிமக்கள் அனைவரையும் முறை செய்து காப்பாற்றும் அந்த மன்னனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். மன்னனும் அவனின் காதலியும் ஒருவரையொருவர் உளமாரக் காதலிக்கிறார்கள். அவள் மன்னனிடம் தன் உள்ளத்தை மட்டுமன்றித் தன்னையே ஒப்படைத்து விட்டாள். அடிக்கடி அவளின் இருப்பிடம் சென்று அவளோடு இன்புற்று வந்த மன்னவன், இப்போது சிலநாட்களாக அவளிடம் செல்வதில்லை. அதனால் அவள் துன்பமடைகின்றாள். காரணம் என்னவென்று தெரியாமல் கலங்குகின்றாள். யாரிடமும் பொய் பேசாதவன் என்று புகழப்படும் மன்னன், தன்னை விரும்புவதாகத் தன்னிடம் மட்டும் பொய்சொல்லி விட்டானோ என்று தவிக்கின்றாள். குடிமக்கள் யாவரதும், குறைகேட்டுத் தீர்த்துவைக்கும் அவன் தன்னை மட்டும் துன்பத்தில் ஆழ்த்தி தவறுசெய்கின்றானே என்று வெதும்புகின்றாள்.

அவளின் வேதனையை அறிந்த அவளின் தோழி அவளுக்கு ஆறுதல் சொல்லிப்பார்க்கிறாள். "மன்னவன் தவறானவன் அல்ல. அரசாளும் மன்னனுக்கு ஆயிரம் கடமைகள் இருக்கும். ஏதோ அரசாங்க அலுவல்கள் காரணமாகவே அவன் வராமல் இருக்கிறான் விரைவில் வருவான் நீ கலங்காதே" என்றெல்லாம் அவளிடம் சொல்லிப் பாரக்கிறாள். ஆனால், நாளாக நாளாக தலைவியின் நிலைமை மோசமாகின்றது. உள்ளத்தின் துயரத்தால் உடலும் நோயுறுகிறது. அவளது கை வளையல்கள் கழன்று விழுகின்ற அளவுக்கு உடல் மெலிந்து விடுகிறது. இனியும் பொறுப்பதற்கில்லை என்றெண்ணிய தோழி மன்னனிடம் செல்கின்றாள். தோழியின் நிலைமையைபற்றிச் சொல்கிறாள். "உலகிற்கெல்லாம் நல்லது செய்கின்ற நீ உன்னை நம்பித் தன்னைக் கொடுத்த என் தோழியை இப்படி வருத்தலாமா? இது உனது புகழுக்குக் களங்கத்தை ஏற்படுத்தி விடாதா?" என்று அவனிடம் நயமாகக் கேட்கிறாள். மன்னனிடம் அவனது பெருமையையும், தன் தோழியின் நிலைமையையும் நல்லமுறையிலே எடுத்துரைக்கிறாள். தலைவிக்காக மன்னனிடம் தூதுசென்ற தோழி, மன்னனைப் பார்த்து அவனது இதயத்தைத் தொடுகின்ற வகையில் கேள்விக்கணைகளை இதமாகத் தொடுக்கின்ற இந்தக்காட்சியை வெளிப்படுத்துகின்ற பாடல் வருமாறு:



பாடல்:
ஈண்டு நீர்மிசைத் தோன்றி இருள்சீக்கும் சுடரே போல்

வேண்டாதார் நெஞ்சுஉட்க வெருவந்த கொடுமையும்

நீண்டு தோன்று உயர்குடை நிழல்எனச் சேர்ந்தார்க்குக்

காண்தகு மதிஎன்னக் கதிர்விடு தண்மையும்
மாண்டநின் ஒழுக்கத்தால் மறுவின்றி வியன்ஞாலத்து

யாண்டோரும் தொழுதேத்தும் இரங்குஇசை முரசினாய்!

ஐயம் தீர்ந்து யார்கண்ணும் அருந்தவ முதல்வன்போல்

பொய்கூறாய் எனநின்னைப் புகழ்வது கெடாதோதான்

நல்கிநீ தெளிந்தசொல் நசைஎனத் தேறியாள்

பல்இதழ்மலர் உன்கண் பனிமல்கக் காணுங்கால்?

சுரந்தவான் பொழிந்தற்றாச் சூழநின்று யாவர்க்கும்

இரந்தது நசை வாட்டாய் என்பது கெடாதோதான்

கலங்கு அஞர் உற்று நின்கமழ்மார்பு நசைஇயாள்

இலங்குகோல் அவிர்தொடி இறைஊரக் காணுங்கால்?

உறைவரை நிறுத்தகோல் உயிர்திறம் பெயர்ப்பான்போல்

முறைசெய்தி எனநின்னை மொழிவது கெடாதோதான்

அழிபடர் வருத்தநின் அளிவேண்டிக் கலங்கியாள்

பழிதபு வாள்முகம் பசப்புஊரக் காணுங்கால்?

ஆங்கு, தொன்னலம் இழந்தோள் நீ துணைஎனப் புணர்ந்தவள்

இன்னுறல் வியன்மார்ப! இனையையால் கொடிது என

நின்னை யான் கழறுதல் வேண்டுமோ

என்னோர்கள் இடும்பையும் களைந்தீவாய் நினக்கே!

(கலித்தொகை, மருதக்கலி பாடல் இல: 35
பாடியவர்: மருதன் இளநாகனார்)

கடலில் இருந்து எழுந்து இந்தப் பூமியின் இருளைப் போக்குகின்ற சூரியனைப் போன்றவன் நீ. வேண்டாதவர்களின் நெஞ்சங்களைக் கலங்கச் செய்யும் கொடூரமான ஆற்றல் நிறைந்தவன் நீ. நீண்டு உயர்ந்த குடையை உடைய உன் ஆட்சியினைத் தமது நிழலாக எண்ணிவந்தவர்களுக்கு, கண்களால் காணக்கூடியதாக விளங்கும் மதியின் குளிர்மையான கதிர்களைப் போல அருள்பவன் நீ. மாட்சிமை நிறைந்த உனது அரசியல் ஒழுக்கத்தினால் இந்தப் பரந்த உலகத்தினை தவறில்லாமல் பேணி, எல்லோரும் தொழுது போற்றும் விதமாக வெற்றிமுரசுடன் வீற்றிருப்பவன் நீ. கடுந்தவமியற்றும் முனிவரைப்போலவே எவரிடத்திலும் நீ பொய்சொல்லமாட்டாய் என்று, எவ்வித சந்தேகமும் இல்லாமல் உலகத்தவர்கள் உன்னைப் புகழ்கின்றார்கள்.

ஆனால்,அன்புகொண்ட நீ சொன்ன வார்த்தைகளை, தன்மீது விருப்பத்துடன் கூறிய வார்த்தைகள் என்று எண்ணியவள் என் தோழி. பல இதழ்களைக்கொண்ட நீல மலரைப்போன்ற, மைதீட்டப்பெற்ற அவளின் கண்கள் கண்ணீர் சொரிவதை நான் காண்கின்றேன். இந்தச் செய்கையினால் உனது புகழ் கெட்டுவிடாதா?

நறுமணம் வீசுகின்ற உனது மார்பை விரும்பிய என் தோழி உள்ளம் கலங்கி, நோயுற்று வாடுவதினால், அவள் அணிந்திருந்த வளையல்கள் முன்னங்கைகளிலிருந்து கழற்று வீழ்வதை நான் காண்கின்றேன். வானத்திலிருந்து நீர்சுரந்து மழையாகப் பொழிவதைப்போல, உன்னை நாடியவர்கள் எல்லோருக்கும் அவர்கள் கேட்டவற்றை விரும்பியவாறு கொடுக்கும் தன்மையுயடையவன் நீ என்று சொல்லப்படுவது இனிமேல் உனது இந்தச் செய்கையால் கெட்டுவிடாதா?

உயிர்களின் கால எல்லைக்கேற்ப எவ்வித பாரபட்சமும் இல்லாது அவற்றை கொண்டுபோகின்ற கூற்றுவனைப்போல தவறேதுமில்லாமல் அறத்தின் வரையறைப்படி நீ செங்கோலோச்சுகின்றாய் என்று சொல்கின்றார்களே, நெஞ்சத்தை அழிக்கும் நினைவுகள் வருத்த உனது தயையை வேண்டி அவள் கலங்குகின்றபோது அவர்களது அந்தச் சொற்கள் பொய்த்துவிடாதோ?

**சட்டத்தரணி, பாடும்மீன்**
**சு.ஸ்ரீகந்தராசா**

எப்படிப்பட்டவர்களின் தன்பங்களையும் நீக்கி அவர்களுக்கு அருள்புரிகின்ற அரசர் பெருமானே!

அகன்ற மார்பை உடையவரே! நீயே தனது ஒரே துணையென உன்னோடு கூடியவள். தன்னை இழந்தவள். அத்தகையவள் துன்பமடைவது கொடுமையல்லவா? இதை நான் வந்து உன்னிடம் கூறுவதும், உனது அருளுக்காக இரந்து வேண்டுவதும் தேவையா?

(என்று மன்னனிடம், அவனோடு உறவுகொண்ட தலைவிக்காக அவளின் தோழி முறைப்படுவதாக அமைந்த பாடல் இது)

தொடர்ச்சி...

## கத்தாரில் மாவனல்லையின் 'லெக்செஸ்' கிரிக்கெட் அணி சாம்பியன்


சென்ற ஆண்டைப்போலவே இவ்வாண்டும் Lexus, United, Baduriyans, Manchester United, Red Side மற்றும் Lucky Boys போன்ற சிறந்த அணிகள் பங்குபற்றியிருந்ததுடன், நூற்றுக்கும் அதிகமான கத்தார் வாழ் மாவனல்லை மக்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மாவனல்லையின் தலை சிறந்த பாடசாலைகளான ஸாஹிரா கல்லூரி மற்றும் பதுரியா கல்லூரி இரண்டுக்கும் இடையிலான நட்பு ரீதியான போட்டியானது மிகவும் விறு விறுப்பாகவும் பலரினதும் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியிலும் இடம் பெற்றது.

இதில் இரு பாடசாலைகளை சேர்ந்த கத்தார் வாழ் பழைய மாணவர்கள் தத்தமது பாடசாலைகளுக்காக களமிறங்கினர். இதில் பதுரியா கல்லூரி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனை ஏற்படுத்தும் உடல் சார்ந்த பிரச்சினைகள் –6



**ஈரல் அழற்சி:**
'எதனோலின்' இரசாயன விளைவாக ஈரலில் ஏற்படும் மற்றுமொரு ஆபத்தான பாதிப்பு ஈரல் அழற்சியாகும். இதன் அறிகுறிகளாக பசியின்மை, ஓங்காளம், வயிற்றுக் குத்து, காய்ச்சல், மாறாட்டம் என்பன காணப்படலாம். பொது வைத்திய நிபுணரை உடன் நாடவேண்டிய தீவிர பிரச்சினையாகும். காலம் தாமதித்தால் நாட்பட்ட ஈரல் பாதிப்பாக மாறிவிடும்.

ஈரல் கருகல் நோய் (Cirrhosis of the Liver)
நாட்பட்ட மதுபாவனை ஈரல் கருகல் நோயை ஏற்படுத்தும். இந்நிலை மீள முடியாதது. எனவே ஈரல் செயலிழப்பு உயிரிழப்பாக மாறும். இதுவரை ஈரல் மீள பதித்தல் (Liver transplantation) பெரிதாக வெற்றி பெறாததாலும். அதிக செலவாகின்ற ஒரு மருத்துவ சிகிச்சை என்பதாலும், ஈரல் பாதிக்கப்பட்டவர் பெரும்பாலும் மரணமடைவதே வழமை. முற்றாக ஈரல் செயலிழந்த ஒருவர் இறுதி காலங்களில் நிறைமாத கர்பணி போன்ற தோற்றத்துடன் மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை காணலாம். (Ascitis)

ஈரல் புற்றுநோய் (Carcinoma of Liver)
ஈரல் புற்றுநோயை ஏற்படுத்துவதில் வைரசால் பரப்பப்படும் சில பொருட்கள் என்பவற்றுடன் மதுபாவனையும் முக்கிய இடம்பெறுகின்றது.

களப்பகுதி இரத்த குழாய் புடைப்பு (Esophageal Varies)

ஈரல் கருகல் (Cirrhosis) நிலைக்கு பின்னர் களப்பகுதியில் உள்ள இரத்த குழாய்கள் அதிகம் பருத்த நிலைக்கு உட்படும். இவற்றில் ஏற்படுகின்ற இரத்த அமுக்கமாற்றம் நாளடைவில் குருதிப்பெருக்காக மாறும், அவசர சத்திரசிகிச்சை இல்லை எனில் அதிக இரத்த இழப்பு உயிரிழப்பாக முடிவடையும்.


சதையச்சுரப்பி அலற்ச்சி (Pancreatitis)
நாட்பட மதுபாவனையாளர்களில் சதையசுரப்பி அழற்சி ஏற்படலாம். சதையசுரப்பி சமிபாட்டு நொதியங்கள், குருதியில் வெல்ல அளவை கட்டுப்படுத்தும் இன்சுலின் என்பனவை உட்பட ஏராளமான இரசாயனங்களை சுரப்பதால் நேரிடையாகவும். மறைமுகமாகவும் ஒரு மனிதனின் அனுசேப தொழிற்பாடுகள் குறுகிய, நாட்பட்ட அளவில் பாதிக்கும்.

சதையச்சுரப்பி புற்றுநோய் (Carcinoma of Pancreas)
சதையச்சுரப்பியில் புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளில் மதுபாவனையும் பிரதானமானது.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமர்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

# மூதாதையரின் காலடிகள்

## ஈச்சலம் பற்று குன்றுகள்



கொட்டியாரத்தின் தொன்மை வரலாறு ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு தன்மைத்ததாய் இருந்தாலும் குளக்கோட்டன் வரலாற்றோடும் வெருகல் கோயிலோடும் சோழ மன்னர்களின் வரலாற்று எச்சங்களோடும் தொடர்புபட்டு நிற்கின்றன. ஆனாலும் இவையெல்லாவற்றையும் கடந்து, புராதன வரலாற்று செய்திகளை இப்பிரதேசத்தில் காணப்படும் சிறிய மலைக்குன்றுகள் வரலாற்றுப் புதையல்களை சுமந்த வண்ணம் நம் மூதாதையர்களின் காலடிகளால் வரையப்பட்ட வரலாற்று நினைவுகளாய் உள்ளன.

ஈச்சலம் பற்று கிராமம் தனியான வரலாற்றைக் கொண்ட பழம் தமிழ் கிராமமாகும். நாம் இங்கு பேசுவது ஈச்சலம் பற்றுக் குன்றுகள்.

மூதூரில் இருந்து பயணிக்கும்போது அலியுளுவையை தாண்டி, அரிப்பு வழியாக பூமரத்தடிச்சேனையை கடந்து செல்லும் போது ஈச்சலம்பற்றுச் சந்தி நம்மை வரவேற்கும். காடும் வயலும் களனியுமாய் வாழ்வின் வளத்தை சொல்லி நிற்கும் இந்த பகுதியில் வெருகலில் இருந்து மாவடிச்சேனையை தாண்டி வரும் போது ஈச்சலம்பற்று குன்றுகள் நம் கண்ணில்படும்.

தமிழ் மொழி பிராகிருத வரிவடிவ எழுத்தின் மூலத்தைக் கொண்டது என்று பல ஆரிய மனோபாவம் கொண்ட தொல்லியலாளர்கள் சொல்லி வந்த சூழ்நிலையில் ஐராவதம் மகாதேவன் போன்றோர் சிந்துவெளி எழுத்துக்களை தமிழின் வரி வடிவத் தொடக்கமாக அறிவுறுத்தி ஆய்வுப் பரப்பில் புதிய பாய்ச்சலை உருவாக்கினார்கள். இந்தியாவின் பல பாகங்களிலும் அசோக பிராமி கல்வெட்டுக்கள் காணப்பட்ட தமிழ் நாட்டில் தமிழர்களின் தொல்லியல் தடங்களாக "தமிழ்" பிராமி மலைக் குகைகளிலும் கோயில் கட்டிடக் கல்லிடுக்குகளிலும் கண்டுபிடிக்கப்பட்டது. தமிழுக்கே உரித்தான ழ ம ன என சிறப்பு எழுத்துக்களுடனான தமிழ் பிராமி தமிழின் அடையாளத்தை தமிழின் தொன்மையை வலியுறுத்தி நின்றது.

ஈழத்திலும் பல இடங்களிலும் தமிழ் பிராமி தமிழர்களின் இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரான தொடர்ச்சியை பேசியது. அந்த வகையில் ஈச்சலம்பற்று குன்றுகளில் உள்ள கல்வெட்டுக்களும் முக்கியம் பெறுகின்றன.

மனிதர்களின் புராதன வாழ்விடங்களாக நதிக்கரைகளும் மலைக்குன்றுகளும் குகைகளும் பயன்பட்டிருக்கின்றன. அந்த வகையில் மாவலியின் ஆற்றுப்படுக்கையாக நீளும் ஈச்சலம் பற்றும் ஈச்சலம்பற்றுக் குன்றுகளும் தமிழர்களின் புராதன வாழ்விடங்களாக இருந்திருக்கின்றன.

அவ்வப் பகுதியில் ஆட்சி செய்த மன்னர்கள் தங்கள் வரலாறுக் குறிப்புகளைக் கல் வெட்டுக்களாக குன்றுகளில் உள்ள பாறைகளில் பொறித்துச் சென்றுள்ளனர். அத்தகைய குன்றுகளில் ஒன்றாக ஈச்சலம்பற்றுக் குன்றுகள் நம் கண் முன் வரலாற்று சான்றுகளை தமிழ் பிராமி எழுத்துக்களை தாங்கி நிற்கிறது.

மூன்று பெரும் பாறைகளில் இந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பாறைகள் எழுத்துக்களை பொழிவதற்காக தயார்படுத்தப்பட்டுள்ளன. சாரம் கட்டியே



எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் பாறை விளிம்புகளிலேயே நம் கைகளுக்கு எட்டாத உயரத்தில் அவை அமைந்துள்ளன. ஆகவே சாதாரண மனிதர்களால் இவை செய்யப்பட்டிருக்க வாய்ப்பிலை. அரச அதிகாரம், அல்லது ஒரு குழுவாக, சங்கமாக, நிறுவனமாக இயங்கியவர்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தமிழின் சிறப்பு எழுத்துக்களிலான பிராமி எழுத்துக்களாக அமைந்துள்ளன. எழுத்துக்கள் உள்ள பாறைகள் விதானங்களாக அமைய, மனிதர்களின் வாழ்விடமாக அமையக் கூடிய சாரலாக பாறையின் சரிவுப் பகுதிகளும் ஒரு குகை போல் அமைந்துள்ளது. அந்தக் குகை முகப்பில் சிறிய கிணறு போன்ற அமைப்பும் அதில் தண்ணிர் தேங்கி நிற்கும் சுனையுமாக மனித வாழ்விடத்தின் கூறுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன இக் குன்றுகள்.

இவ்வழியால் போவோர் வருவோர்க்கு வெறும் பாறைகளாக காட்சியளிக்கும் இக் குன்றுகள், ஈழத் தமிழர்களின் வரலாற்று தடமாய், நம் தொல் நிலையமாக இறுமாந்து நிற்பதாகவே எனக்குப்படுகிறது.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 14

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### கலைச் சொற்கள்

01. அரசியல், விளையாட்டு முதலிய நாட்டுநடப்புக்களை எடுத்துக்காட்ட வித்தியாசமான முறையில் நையாண்டியுடன் காட்டூன் படங்களைப் பத்திரிகைகளில் வரைவர். இங்கு காட்டூன் (Cartoon) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) கேலிச் சித்திரம் (3) நையாண்டிச் சித்திரம்
    (2) களிச் சித்திரம் (4) வரைபுக் கோட்டுச் சித்திரம்

02. கிடைப்பதற்கரிய பொருள்களை ஒவ்வொரு நாடும் மியூசியத்தில் வைத்துப் பாதுகாப்பது வழமையானதாகும். இங்கு மியூசியம் (Museum) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) தேசிய சுவடிகள் கூடம் (3) பாதுகாப்பு அமைச்சு
    (2) பொது நூலகம் (4) அருங்காட்சியகம்

03. வேலைக்கு அப்பிளிகேசன் போட்டுப்போட்டு அவன் களைத்துப்போய்விட்டான். இங்கு அப்பிளிகேசன் (Application) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) மேன்முறையீடு. (3) கோரிக்கைப் படிவம்
    (2) விண்ணப்பம் (4) தகைமைப் படிவம்

04. “கிளாக் என்ற பதவியை இப்போது அரச முகாமைத்துவ உதவியாளர் என்று மாற்றி விட்டார்களாமே” என்று தன் மாமாவிடம் கண்ணன் கேட்டான். இங்கு கிளாக் (Clerk) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) எழுத்தாளன் (3) முகாமைத்துவாளன்
    (2) எழுதுவினைஞர் (4) முகாமையாளன்

05. சில பொருள்களுக்கு ஆரம்பத்தில் டிமாண்ட் இருக்கும். சிறிது காலம் சென்றபின் அது இருக்காது. ஆனால் சில பொருள்களுக்குத் தொடர்ந்து டிமாண்ட் இருந்துகொண்டே இருக்கும். இங்கு டிமாண்ட் (Demand) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) கோரிக்கை (2) மேன்மை (3) கேள்வி (4) பெறுமதி

06. வெப்சைற் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பர். இங்கு வெப்சைற் (Web site) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) இணையம் (2) வலைத்தளம் (3) வலைப்பக்கம் (4) இணையத்தளம்

07. ஒரு நாட்டினுடைய பஜெற் எப்போதும் மக்களுக்குச் சுமையாக அமையக்கூடாது. இங்கு பஜெற் (Budget) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) செலவுத்திட்டம் (2) வரவுசெலவு (3) பாதீடு (4) கணக்கீடு

08. உடுப்பு வைப்பதற்குப் பொருத்தமான அல்மிரா ஒன்று வாங்க வேண்டும் என நினைத்துள்ளேன். இங்கு அல்மிரா (Almirah) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) அலுமாரி (2) நிலைப்பேழை (3) கபேட் (4) உடுப்பு அலுமாரி

09. நாடுகள் கூடி ஆராய்கின்ற அளவுக்கு ஒவ்வொரு நாட்டினதும் வெதர் மாறிக் கொண்டிருப்பதாக அறிய முடிகிறது. இங்கு வெதர் (Weather) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) காலநிலை (2) குளிர்நிலை (3) வானிலை (4) வெப்பநிலை

10. பல்கலைக்கழகங்களுக்குரிய அக்கடெமிக் இயர் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இங்கு அக்கடெமிக் இயர் (Acadamic Year) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) பள்ளியாண்டு (2) கல்வியாண்டு (3) முதலாண்டு (4) லீவு ஆண்டு

11. எந்தவொரு வேலையும் உரிய இலக்கைச் சிறப்பாக அடையவேண்டுமென்றால் அங்கு மொணிற்றரிங் அவசியமாகும். இங்கு மொணிற்றரிங் (Monitoring) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) வகுப்புத் தலைவன் (3) வேவுபார்த்தல்
    (2) மேற்பார்வை (4) கண்காணித்தல்

12. சென்சஸ் புள்ளிவிபரங்களின்படி ஆண்களின் தொகை குறைவடைவதாகத் தகவல். இங்கு சென்சஸ் (Census) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) உள்நாட்டு மதிப்பு (3) தொகை மதிப்பு
    (2) வெளிநாட்டு மதிப்பு (4) உலக மதிப்பு

13. முகநூல் பார்ப்பதில் பலருக்கு இன்ரெஸ்ற் அதிகம். இங்கு இன்ரெஸ்ற் (Interest) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) மகிழ்ச்சி (2) விருப்பம் (3) ஆர்வம் (4) சுயநலம்

14. இந்த நாட்டிலும் வேறொரு நாட்டிலும் சிற்றிசன்ஷிப் கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக முடியாது என்று கூறுவர். இங்கு சிற்றிசன்ஷிப் (Citizenship) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) பிரஜாவுரிமை (2) நாட்டு அனுமதி (3) நாட்டுச் சான்றிதழ் (4) வாக்குரிமை

15. ஒரு படைப்பைப் பற்றிக் கிறிற்றிசம் செய்யும் போது பக்கச்சார்பின்மையின்றிச் செய்ய வேண்டும். இங்கு கிறிற்றிசம் (Critism) என்பதைக் குறிக்கத் தமிழில் வழங்கும் சொல்.
    (1) திறனாய்வு (2) குறைநிறை (3) ஆராய்ச்சி (4) படைப்பாக்கம்

# கற்போம்

## முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதி - விடை

**முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதி** என்ற தலைப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடை

| | | |
|---|---|---|
| 1. (2) | 6. (1) | 11. (4) |
| 2. (2) | 7. (2) | 12. (3) |
| 3. (4) | 8. (2) | 13. (3) |
| 4. (1) | 9. (3) | 14. (3) |
| 5. (2) | 10. (3) | 15. (4) |

சரியான விடை எழுதி அனுப்பியவர்:
**யு.அபிவர்மன்** , தரம்-11 , மட்/இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 13.12.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு



## விடுமுறையில் மின்னணு சாதனங்களில் தஞ்சமடையும் குழந்தைகளை பராமரிப்பது எப்படி?

குழந்தைகள் எவ்வளவு நேரம் மின்னணு திரைகளில் செலவிடலாம்; எவற்றையெல்லாம் பார்ப்பதற்கு அனுமதியுண்டு என்று திட்டமிட்டு தெளிவுற குழந்தைகளுக்கு விளக்குங்கள்

குழந்தைகள் இணையதளத்தில் என்ன செய்கிறார்கள் என்பது குறித்தும், என்ன பார்க்கிறார்கள் என்பது குறித்தும் விளங்க வையுங்கள்.

குழந்தைகளிடம் அவர்களுக்கு தெரிந்த நண்பர்களுடன் சமூக இணையதளங்களில் தொடர்புகொள்வதற்கு ஊக்குவியுங்கள்.

இணையத்தில் ஒன்றை கிளிக் செய்வதற்கு முன்னர் சிந்திக்க வேண்டியதன் அவசியம் குறித்து குழந்தைகளுக்கு கற்பியுங்கள்.

குழந்தைகள் தெரிந்தோ, தெரியாமலோ தவறான விடயங்களை இணையதளங்களில் பார்ப்பதை தடுக்கும் மென்பொருள்களை பயன்படுத்துங்கள்.

சமூக வலைதளங்களில் தனிப்பட்ட தகவல்கள், புகைப்படங்கள், காணொளிகள் ஆகியவற்றை பகிர்வதால் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் குறித்து குழந்தைகளுக்கு தெளிவாக விளக்குங்கள்.

'நல்ல முன்மாதிரியாக இருங்கள்
'

"இந்த தொழில்நுட்ப காலத்தில் குழந்தை வளர்ப்பு என்பது எளிதான காரியமல்ல" என்று நார்டான் நிறுவனத்தின் ஐரோப்பாவின் மேலாளரான நிக் ஷா கூறுகிறார். "குழந்தைகளை சரிவர உண்ண வைப்பது, சரியான நேரத்திற்கு வீட்டுப்பாடங்களை செய்ய வைப்பது, தூங்க வைப்பது உள்ளிட்ட அந்தக் கால பிரச்சனைகள் தொடர்ந்து இருப்பதாகவும், அதோடு குழந்தைகளின் தொழில்நுட்பம் சார்ந்த பயன்பாட்டை நிர்வகிப்பதும் இணைந்துள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

இருந்தபோதிலும், 60 சதவீத பெற்றோர் தங்களது குழந்தைகள் புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கு இதுபோன்ற சாதனங்கள் பெரும் உதவி புரிந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

"குழந்தைகளுக்கு தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்துவது தொடர்பாக விதிமுறைகளை விதிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு பெற்றோரும் தனது செயல்பாட்டை சுயபரிசோதனை செய்து, குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்" என்று ஷா மேலும் விளக்குகிறார்.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## மட்டு நகரின் கால் பந்தாட்டத்தில் சிறந்த மத்திய கள வீரராகப் பிரகாசித்த அமரர் வின்சன்

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டத் தெரிவு அணியில் 1990 களில் ஒரு சிறந்த மத்திய கள வீரராகப் பிரகாசித்தவரே அமரர் வின்சன்.

வின்சன் அவர்கள் மட்டக்களப்பு பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் அங்கத்தவராக இருந்து பாடுமீன் அணியின் மத்திய கள வீரராக ஆடியவர். விசேடமாக அணியின் தலைவராக இவரே விளங்கினார்.

கால்பந்தாட்ட விளையாட்டினைப் பொறுத்த மட்டில் மத்திய கள வீரர்கள் மிகவும் முக்கியமானவர்கள், ஏனெனில் பந்தினை முன்கள வீரர்களை நோக்கி நகர்த்துவதில் மத்திய கள வீரர்களின் பங்கு சிறப்பாக இருந்தாற்தான் அந்த அணி வெற்றி இலக்கை அடைய முடியும்.

மைதானத்தில் பந்தினை வைத்து இரசிகர்களைக் கவரும் வகையிலான பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு மத்திய கள வீரர்கள் மிகவும் முக்கியமான வகிபங்கை ஆற்றுபவர்களாக இருப்பார்கள். சிறந்த ஆற்றுகையினை வெளிப்படுத்தும் மத்திய கள வீரர்களைக் கொண்டுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் இரசிகர்களைக் கவருகின்ற கால்பந்தாட்டத்தினை ஆடும் அணிகளாக விளங்கி வருகின்றன.

இந்த வகையில் பாடுமீன் கழகத்தில் ஆடிய மத்திய கள வீரர்களுள் மிகவும் திறமையானவராகவும் தனது சிறந்த ஆட்டத்தால் பல இரசிகர்களால் விரும்பப்பட்டவராகவும் வின்சன் 1990 களில் பிரகாசித்தார். இதன் காரணமாக தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணியின் பிரதான மத்திய கள வீரராகவும் அவர் திகழ்ந்தார். மாவட்டத் தெரிவு அணியின் தலைவராக வின்சன் சிறப்பாகச் செயலாற்றியுள்ளார்.

வின்சன் மைதானத்தில் ஆடும் போது மிகவும் சாந்தமான தன்மையுடனேயே காணப்படுவார். உணர்ச்சி வசப்பட்டு கோபங் கொள்ளும் வீரராக வின்சன் அவர்களைக் காண முடியாது. ஒரு கனவான் தன்மை கொண்ட வீரனாகவே பெரும்பாலும் அவர் காணப்பட்டார். இதன் காரணமாகவே வின்சன் அவர்கள் தான் ஆடிய போட்டிகளின் போது அணித் தலைவர் பதவிக்கு உரியவராகப் பயிற்சியாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனலாம்.

வின்சன் அவர்களிடம் காணப்பட்ட மற்றொரு பண்பு தனது இடத்தில் சிறப்பாக ஆடக்கூடிய இளம் வீரர்கள் வெளிப்பட்ட சூழலில் அவர்களுக்கான வாய்ப்பினை வழங்கும் பொருட்டு தான் கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டமையாகும். ஓய்வு பெற்றாலும் கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்ப்பதை அவர் தவிர்த்ததில்லை.

**து.கௌரீஸ்வரன்**

இவ்விதம் மட்டு நகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் சிறந்த மத்திய கள வீரராகவும், சிறப்பான அணித் தலைவனாகவும், புதிய இளம் வீரர்களுக்கான ஒரு முன்மாதிரி வீரனாகவும் இயங்கிய வின்சன் அவர்களை மட்டு நகரின் கால்பந்தாட்ட இரசிகர்கள் என்றும் மனதில் வைத்திருப்பர்.

## சாய்ந்தமருதில் தங்கம் வென்ற இளைஞர்களுக்கு பாராட்டு




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 30ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப்போட்டி மாத்தறையில் இடம்பெற்றபோது 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் வரலாற்றில் முதல் முதலாக தங்கப் பதக்கம் வென்ற இளைஞர்களுக்கு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின்பின் பள்ளிவாசல் மக்கள் பணிமனையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது - மாளிக்காடு ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் வை.எம்.ஹனீபா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், கல்முனை மாநகர சபை சாய்ந்தமருது உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட இளைஞர் பராளுமன்ற உறுப்பினர் இஸட். எம். ஸாஜீத், அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள்மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ.லத்தீப், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் எம்.பீ. ரஜாய், ஏ.எம்.றிபாஸ், கல்முனை

**காரைதீவு சகா**

சாஹிராக்கல்லூரி விளையாட்டு ஆசிரியர் ஏ. பைசர், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம். நியாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த இளைஞர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டது.

## கோட்டைமுனை விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம்

மட்டக்களப்பில் 46 வருட வரலாறு கொண்ட கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், கழகத்தலைவர் பே. சடாற்சரராஜாவின் தலைமையில் டிசம்பர் 08ம் திகதி (சனிக்கிழமை) பார் வீதியில் அமைந்துள்ள சின்னராஜா மண்டபத்தில் மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளதாக கழகத்தின் பதில் செயலாளர் செ.ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## கத்தாரில் மாவனல்லையின் 'லெக்செஸ்' கிரிக்கெட் அணி சாம்பியன்




கத்தாரில் KJC அமைப்பு ஏற்பாடு செய்து இருந்த "KJC Cricket Battle 2018" ன் மாபெரும் கிரிக்கெட் சுற்று போட்டியில் சாம்பியனாக மாவனல்லையின் "லெக்செஸ்" அணி முடிசூடிக்கொண்டது.

பல தலை சிறந்த அணிகளை எதிர்த்து விளையாடிய இந்த அணி, சிறந்த முறையில் தங்களுக்கான இடத்தை தக்க வைத்துக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியை கொண்டாடும் முகமாக தமது அணி வீரர்களுக்கான இராபோசன நிகழ்வொன்றை 30 நவம்பர் 2018 , கத்தாரில் லக்பிம உணவகத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தது.

கடந்த 23 நவம்பர் 2018 அன்று, பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்த இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி "கத்தார் பௌண்டேஷன் கிரிக்கெட் அரங்கில்" மிகவும் கோலாகலமாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது, KJC அமைப்பானது இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை இரண்டாவது வருடமாகவும் வெற்றிகரமாக நடத்தியது குறிப்பிடத்தக்கது.

KJC அமைப்பானது கத்தாரில் வாழும் கிருங்கதெனிய (மாவனல்லை) சமூகத்தை பிரதிநிதிப்படுத்தும் அமைப்பு ஆகும். இதன் அடிப்படையில் கத்தார் வாழ் மாவனல்லை சகோதரர்களின் சகோதரத்துவத்தை பலப்படுத்தவும் ஒற்றுமையை நிலை நிறுத்தவும் மாவனல்லையை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிக்கு பதினோரு பேர் கொண்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்று போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ச்சி... (பக்கம் -11 )

## இளைஞர் கழகத்திற்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி றைடர் அணி வெற்றி!



இளைஞர் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் இராமகிருஷ்ணா ,விவேகானந்தா,நடராஜானந்த, றைடர் மற்றும் மாவடிப்பள்ளி இளைஞர்கழக அணியினர் பங்குபற்றிஇருந்தனர். இறுதி போட்டிக்கு இராமகிருஷ்ணா மற்றும் றைடர் போட்டியிட்டனர். இதில் றைடர் அணி 2-0 என்ற ரீதியில் வெற்றிவாகை சூடியது

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

தொடர்ச்சி...

## பிறமொழி தெரியாவிடின் ஏனைய மொழிக்காரர் மத்தியில் மறுமொழி கூற வழியின்றி ஊமையாய் இருக்க நேரிடும்

உத்தியோகத்தர்கள் இருமொழியிலும் தேர்ச்சியடைய வேண்டியதும் நாட்டில் அவசியமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக ஒருவரையொருவர் புரிந்துகொள்ளகூடியதாகவிருக்கும். புரிந்துகொள்ளலின் மூலமாகவே நாட்டில் இனயொற்றுமையையும், நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்த முடியும் என அடிக்கடி மதத்தலைவர்களாலும், நாட்டின் தலைவர்களாலும் கூறப்பட்டு வருகின்றது. இதற்காக அனைத்து தரப்பினரும் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் பேசவேண்டும். இந்நிலையில்தான் இங்கு நடைபெற்ற இந்நிகழ்வில், நான்கு மதத்தலைவர்கள் பங்கேற்றிருந்த போதிலும், நான்கு மதத்தலைவர்களும் தமிழில் ஆசியுரைகளை நிகழ்த்தியிருந்தமை சிறப்புக்குரியதென வேல்ராஜா குறிப்பிட்டான்.

பௌத்த சமயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய மதத்தலைவர் சிங்களமொழியை தாய்மொழியாக கொண்டவராகவிருந்தும், தமிழ்மொழியை கற்றதனால், இந்நிகழ்விலே தமிழில் உரையாற்றினார். மேலும் சிங்கள மொழிபேசும் மாணவர்களுக்காக சிங்களத்திலும் உரையாற்றினார். இதன்மூலம் நல்வரவேற்பினையும் நிகழ்வில் பெற்றிருந்தார். இதன்போது, தமிழ்மொழியை கற்றதினால் தமிழ்மக்கள் பற்றிய புரிதலையும் இலகுவாக பெறக்கூடியதாகவிருந்தது என்பதனையும் குறிப்பிட்டார். இதேவேளை கிறிஸ்த மதத்தலைவர் கூறுகின்ற போது, கடந்த காலங்களில் ஏனைய மொழிகளை கற்பதில் நமக்கு சவால் இருந்தது. ஆனால் தற்காலத்தில் ஏனைய மொழிகளையும் கற்கக்கூடிய சூழல் நமக்கிருன்றது. இதன்மூலம் ஏனைய மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டும். இதனால் எமது காரியங்கள் இலகுவாக்கப்படும் என்று கூறியதாக வேல்ராஜா கூறினான்.

இலங்கை நாட்டில் வாழ்வதற்கு தாய்மொழியுடன், அடுத்த அரசகரும மொழியும் தெரிந்திருந்திருந்தால் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வினை வைத்துக்கொள்ள முடியும். அதேவேளை நல்ல பிறமொழி நண்பர்களையும் தேடிக்கொள்ள முடியும். மாணவர்களும் தாய்மொழியுடன் சகோதரத்துவ மொழியையும் பழகிக்கொண்டால் நாட்டில் ஊமைகளாக இருக்கும் சந்தர்ப்பங்களை குறைத்துக்கொள்ள முடியுமென விகஸ்டியும் கூறிவிட்டு இருவரும் அவ்விடத்தினைவிட்டு அகன்றனர்.

தொடர்ச்சி...

## ‘மகாவம்சம்’ எழுதப்பட்டவரலாறு!

பற்றிய விபரங்கள் தொடங்குகின்றன. அதில் உதாரணத்திற்கு ஒரு பந்தி...

“தீர்வுக்காகஉருவாக்கப்பட்ட மாவட்டசபைகள்சரியாகஇயங்கவில்ல. இந்த சிக்கலைத்தீர்ப்பதற்காக சர்வகட்சிமாநாட்டை1983 யூலையில்ந டத்தஜனாதிபதிஏற்பாடுசெய்திருந்தார். இந்தமாநாடுநடப்பதற்கு முதல்தமிழர்வி டுதலைக்கூட்டணிகட்சிமாநாட்டைஏற்பா டுசெய்திருந்த வேளையில்பிரபாகரனின் திட்டத்தின்படி இந்த நாட்டில் “கருப்புயூலை” என்றுஅழைக்கப்படும் மோசமான நிகழ்வுக்கு காரணமாகஆனபயங்கரவாதத் தாக்குத லைபுலிகள்இயக்கம்நடத்தியது.”

புனைவுகளாலும், புரட்டுகளாலும் திரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட “இதிகாசக் காவியம்” இலங்கையின் உத்தியோகபூர்வமான வரலாற்றுப் பதிவாக அங்கீகரிக்கப்பட்டு இன்றும் எழுதப்பட்டுவருகிறது. “இலங்கையின் வரலாறு” என்கிற பேரில் ஏனைய இனங்களுக்கு எதிராக “சிங்கள பௌத்தர்களின்” வரலாறு தொடர்ந்தும் பரப்பப்பட்டு வருகிறது. இன்றைய இலங்கையின் நாசத்தில் மகாவம்சம் பரப்பிய கருத்துருவாக்கங்களுக்கு பெரும் பங்கு உண்டு. இனப்பிரச்சினை பற்றி ஆராய்பவர்கள் தமது ஆய்வுகளுக்கு உசாத்துணையாக மகாவம்சத்தை கூடவே சமாந்திரமாக பிரயோகிக்காவிட்டால் அது ஆய்வாக அமைவதில்லை. ஆனால் அப்படி ஆய்வு செய்ய முடியாதபடி இவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தான் வெளியிடப்பட்டு வருகின்றன. மூல நூலின் சில தமிழாக்க பதிப்பு மாத்திரம் பரவலாகக் கிடைக்கிறது.

தொடர்ச்சி...

## சுற்றுலாத்துறையில் உள்ளூர் நிபுணர்கள் தேவை

செய்வதில்லை.

அரச துறையில் தொழில் புரிவது சிறந்தது தனியார்த்துறையில் தொழில் புரிவது ஆபத்தானது என்ற எமது இளைஞர்களின் மனநிலையை மாற்றும் வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

நாட்டிலே 82 சதவீதத்துக்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களை தனியார்துறையும் அரச துறை 14 சதவீதமான வேலைவாய்ப்புக்களையும் வழங்குகிறது என்றார்.

தொடர்ச்சி...

## ‘முன்னாள் விடுதலைப்புலிகள் மீது முத்திரை குத்த வேண்டாம்’

முற்று முழுதாக மறந்து விட்டோம். எந்தவொரு சம்பவம் நடந்தாலும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் செய்திருப்பார்கள் என்று எங்களின் மீது முத்திரை குத்துவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அதேவேளை வவுணதீவில் இரண்டு பொலிசார் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் கண்டிப்பதுடன் உண்மையான குற்றவாளிகளை கைது செய்யுமாறும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இதனை அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல அனைத்து தரப்பினருக்கும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

இன்று மட்டக்களப்புக்கு எமது முன்னாள் போராளிகள் வருவதற்கு அச்சப்படுகின்றனர். இந்தக் கூட்டத்திற்கு வன்னியிலிருந்து வருவதற்கு முயற்சித்த போது அவர்களை மட்டக்களப்புக்கு செல்ல வேண்டாம் என அவர்களின் குடும்பத்தினர் தடுத்து விட்டனர். முன்னாள் போரளிகளின் மீது சகல பழிகளையும் கொண்டு போய் திணிப்பதனால் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது’ என்று கூறியுள்ளார்.

தொடர்ச்சி...

## மகாகவி பாரதிக்கு 136 வயது

முன்னேற்றக்கழகமும் பாரதியை மகாகவியாக ஏற்றுக்கொண்டமை, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, பாரதியை கம்பனுக்குப்பின்னர் தோன்றிய பெருங்கவியாக எடுத்துக்கூறிய செய்திகளையும் விபரிக்கிறது.

அவர்களின் அக்கறை யாவும் தமிழ்மொழியிடத்தும் தமிழச்சாதியிடத்திலும் நீடித்திருந்தாலும், இந்த நூற்றாண்டில், அதாவது பாரதி நூற்றாண்டு முடிந்து அதற்குபின்னர் வரும் நூற்றாண்டில் தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றி வேறுவகையான ஆராய்ச்சிகளும் தரவுகளும் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

அதற்கு முன்னர் ஒரு சிறிய கதையை சொல்வோம். சில வருடங்களுக்கு முன்னர், அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் மரியா ஸ்மித் ஜோன்ஸ் என்ற பெண்மணி இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது அவருக்கு வயது 89. பழங்குடி இனத்தைச்சேர்ந்த அவர் அம்மக்களின் மொழிகளில் ஒன்றான " ஏயக்" என்ற மொழியை பேசியவர். அவர்தான் அந்த மொழியை இறுதியாகப்பேசியவர். அவருக்குப்பின்னர் அந்த மொழியை எவரும் பேசமாட்டார்கள் என்பது தெரிந்தே, ஏயக் மொழிக்கான அகராதியையும் தயாரித்தார். இனிமேல் யாராவது அந்த அகராதியின் துணையோடு படித்தால்தான் அம்மொழி வாழும். இரண்டு வாரத்திற்கு ஒரு மொழிவீதம் உலகில் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு மொழி அழிந்துகொண்டிருக்கிறது. அல்லது காணமால்போகிறது. அழிந்துபோவதும் காணாமலாவதும் ஒன்றுதான். மறைந்த மரியா ஸ்மித் ஜோன்ஸ் வாழ்ந்த அலாஸ்காவில் எஞ்சியிருக்கின்ற மேலும் சில மொழிகளும் அழிந்துவிடுவதற்கான வாய்ப்பிருக்கிறது.

அவ்வாறு அழியும் மொழிகளுடன் அவற்றின் வரலாறும் அழிந்துவிடலாம். ஒரு மொழி தொடர்ந்து வாழவேண்டுமாயின் குறைந்தது ஒரு இலட்சம்பேராவது அந்த மொழியை பேசிக்கொண்டிருக்கவேண்டும் என்பது மொழியியல் வல்லுனர்களின் கருத்து.

அந்த வகையில் தமிழ்மொழி அழிந்துவிடாது என்று இந்த நூற்றாண்டில் நாம் ஆறுதல்கொண்டாலும், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும், இலங்கை, தமிழ்நாடு, மற்றும் மலேசியா, சிங்கப்பூரிலும், தொலைக்காட்சி ஊடகங்களிலும் தமிழ் சினிமாக்களிலும் தமிழின் தேவை குறைந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. வெளிநாடுகளில் தமிழர்களின் அரங்கேற்றங்கள் பதச்சோறு.

தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இதற்கு மிகச்சிறந்த உதாரணம். இலங்கையில் பெருகிவரும் சர்வதேசக்கல்லூரிகள் (International Colleges) மற்றும் ஒரு உதாரணம்.

அமெரிக்காவில் வாழும் பாரதியாரின் கொள்ளுப்பேத்தி மீராவுக்கு தமிழ்பேசமுடியவில்லை என்றால், அதற்காக பாரதி மீண்டும் உயிர்பெற்று வந்து அவரை கோபித்துக்கொள்ளத்தான் முடியுமா...?

யாழ்ப்பாணத்திற்கு சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் வருகைதந்திருந்த இஸ்ரேல் விஞ்ஞானிகள் "இந்த மண்ணின் தண்ணீர் உவர் நீராக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது" என்று எச்சரித்துவிட்டுச் சென்றார்களாம். ஆனால், அதனை அரசியல் தலைவர்களோ மக்களோ கவனத்தில் கொள்ளவில்லை. 60 ஆண்டுகள் கடப்பதற்கு முன்பே யாழ்குடாநாட்டின் தண்ணீரின் சுவை எவ்வாறு மாறியிருக்கிறது.....?

ஒவ்வொருவரும் இந்த மாற்றத்தை எமது தாய்மொழிக்கு எதிர்காலத்தில் நேர்ந்துவிடவிருக்கும் மாற்றத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தல் வேண்டும் என்பதும் இந்த ஆய்வின் முக்கிய செய்தியாகும்.

எந்தவொரு மொழியும் வழக்கிலிருக்கும்வரையில் வாழும் என்ற ஆறுதலுடன், தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம் என்ற பாரதியின் கனவுடன் நாம் எமது பணிகளைத்தொடருவோம்.

கனவு மெய்ப்படல் வேண்டும்.

# கலாநிதி இ. நரேந்திரன் தமிழ் பாடசாலை

## புலையவெளி, தம்பானம்வெளி மட்டக்களப்பு

தரம் 6, 7, 8, 9 மற்றும் 10ஆம் ஆண்டு மாணவர்களுக்கான ஆரம்பக்கட்ட கணினி பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.



புலையவெளி மற்றும் தம்பானம்வெளி மாணவர்களை இணைத்து இது நடைபெறுகின்றது.

இது பிந்தங்கிய கிராமங்களில் வாழும் மாணவர்களுக்கு கணினி கற்கை குறித்த ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும் நோக்கில் நடத்தப்படுகின்றது.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தினர் புலையவெளி பேச்சியம்மன் ஆலயத்தினூடாக செயற்படுத்தும் ஒரு திட்டம் இது.



(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)







Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa